வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 05 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 182 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# சிவில் - கட்சி பிரதிநிதிகள் இணைந்து உருவாகியது தமிழ்த் தேசிய பேரவை

## தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வவுனியாவில் நேற்றுக் கூடி தீர்மானம்

வவுனியா, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயரிடப்பட்ட பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



இந்தக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமுகப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு,

15

## கச்சதீவு தொடர்பில் புதிதாக எவ்வித உடன்பாடும் இல்லை!

### கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 30

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் எவ்வித புதிய உடன்படிக்கையும் ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

அது தொடர்பிலான எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லையென வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தொடர்பான விவகாரங்கள் மற்றும் கச்சதீவு பிரச்னை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை மற்றும்

15



## தம்மிக்கவை களமிறக்கும் மொட்டு?

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை ஆதரிக்கும் முடிவை பொதுஜன பெரமுன கட்சி எடுக்கவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

விசேட கூட்டமொன்றை நடத்தி வேட்பாளரை பெயரிடுவதற்கும் மொட்டு கட்சி திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி

15

## இரணைமடுக் குளத்தில் நீராடிய சிறுவன் மாயம்!

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயது சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

குறித்த சிறுவன் அவரது சகோதரன் மற்றும் நண்பர்களுடன் நேற்று முற்பகல் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில் குறித்த சிறுவனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வெளிநாட்டு கடன் சீரமைப்பு; 2 நாட்கள் சபையில் விவாதம்

கொழும்பு, ஜூன் 30

வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை ஜூலை 2ஆம், 3 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பங்கேற்புடனும் கூடிய பாராளுமன்ற

15

## கடலில் மிதந்த மர்மப் பொருளை பருகிய மீனவர்கள் நால்வர் பலி!

### தங்காலையில் துயரச் சம்பவம்

கொழும்பு, ஜூன் 30

தங்காலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்காகக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் நால்வர் மதுபானம் என நினைத்து விஷத் திரவம் ஒன்றை பருகி உயிரிழந்துள்ளனர்.

மேலும் இரண்டு மீனவர்களின் நிலைமை மோசமாக இருப்பதாக கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார்.

தங்காலை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து

15

## ரணிலுக்கு ஆதரவு வழங்குமாறு மொட்டுவுக்கு டில்லி அழுத்தமா?

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமாறு பொதுஜன பெரமுன கட்சிக்கு இந்தியா அழுத்தம் கொடுத்துவருகின்றது என்று ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளராக கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

தம்மால் இயக்ககூடிய நபரொருவர் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என இந்தியா கருதுகின்றது. பொதுவேட்பாளராக ரணில்

15

## தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் தமிழர் யார் எனக் காட்ட சந்தர்ப்பம்!

### சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூன் 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம் தான் தமிழ் பொது வேட்பாளர். எனவே தமிழ்ப் பொது வேட்பாளரை இறுகப் பற்றி பிடித்து இந்த மண்ணில் தமிழ் இனம் யார் என்பதை காட்டும் சந்தர்ப்பம் இதுவே என தமிழரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

15



## காலி சிறைச்சாலையில் இருந்த கைதி சக கைதிகளால் தாக்கப்பட்டு மரணம்!

கொழும்பு, ஜூன் 30

காலி சிறைச்சாலையில் சக கைதிகளால் தாக்கப்பட்ட கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலி பலகொட பிரதேசத்தை சேர்ந்த கைதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் காலி சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்

15

## எமது அரசியல் உரிமைகளை பெற்றுத் தரும் பொறுப்பை சர்வதேச சமூகத்திடம் நாம் ஒப்படைக்கப் போவதில்லை!

### தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ

கொழும்பு, ஜூன் 30

சர்வதேச சமூகத்திடம், மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்று தரும் பொறுப்பை நாம் ஒப்படைக்கப் போவதில்லை. எமக்கான அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான உரிமைகளை பெறுவது, அரசியல் அமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது, அவற்றுக்காக பேரம் பேசுவது ஆகியவற்றை தேர்தல்களில் எமது மக்கள் வழங்கும் மக்கள் ஆணையினால் கிடைக்கும் எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, தமிழ் முற்போக்கு கூட்டணி உள்நாட்டில் அரசியல் பேரங்களையும் ஜனநாயக போராட்டங்களையும் முன்னெடுத்துப் பெற்றுகொள்ளும்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர் கல்கியின் யாழ்ப்பாண ஞாபகங்கள் - 2

# தமிழகத்தின் வேதாரணியம் போன்ற யாழ்ப்பாணம்!

**- அனந்த பாலகிட்ணர்.**

இந்தியாவில் வேதாரணியத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்த்தோருக்கு யாழ்ப்பாணம் ஏதோ பழக்கப்பட்ட இடம் போன்றே தோன்றும். எமது மோட்டார் கார் நீண்ட பயணத்தின் பின்னர் யாழ்ப்பாணம் நகரையடைந்தது. அப்போது எமக்காக காத்து நின்ற ஒருவர், "லேடி இராமநாதன் ஐந்து மணியிலிருந்து உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்" என்று கூறினார்.

யாழ்ப்பாணத்தைக் கடந்து, மருதனார்மடத்தை அடைந்தோம். ஒரு விசாலமான வளவுக்குள் எமது மோட்டார் கார் சென்று, அங்கிருந்த இல்லத்தின் வாசலில் நின்றது. வாசலில் லேடி இராமநாதன் நின்றார். அவரும் அவரது புதல்வியும் சென்னையில் இடம்பெறும் சங்கீத இசை விழாக்களுக்கு தவறாமல் வந்து இசைக் கச்சேரிகளை கேட்டு இரசிப்பவர்கள். தற்போது அவர் எம்மை தமது வீட்டு வாசலில் வரவேற்றார்.

லேடி இராமநாதன் ஓர் அமெரிக்க பெண்மணி. மறைந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் அமெரிக்கா சென்ற போது அங்கே லேடி இராமநாதனைச் சந்தித்தார். பொன். இராமநாதனின் சமய பிரசங்கங்களைக் கேட்ட லேடி இராமநாதனுக்கு இந்து சமயத்தின்மீது பெரும் விருப்பம் உண்டாயிற்று. நாளடைவில் அவரது சீடப்பிள்ளையாகி, பின்னர் இருவரும் காதல் வயப்பட்டு மணப்பந்தத்தில் இணைந்தனர். அன்று முதல் நடை, உடை, பாவனை, வாழ்க்கை முறை ஆகியவற்றில் ஓர் உயர்வான இந்துப் பெண்ணாகவே லேடி இராமநாதன் இருந்து வருகின்றார். இந்த சிறப்பான தம்பதிகளுக்கு ஒரு புதல்வி இருக்கின்றார். அவரது பெயர் சிவகாமசுந்தரி.

சிவகாமசுந்தரியின் கணவரான எஸ். நடேசபிள்ளை இலங்கையின் அக்கால செனட் சபை உறுப்பினராக இருந்தவர். செனட்டர் எஸ். நடேசபிள்ளை அவர்களை கொழும்பு நகரசபை கூட்டத்தில் முதலில் சந்தித்தேன். அச்சமயம் என்னை நிச்சயம் யாழ்ப்பாணம் வரவேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பு, சேர் பொன்னம்பலம் இராமநாதனின் யாழ்ப்பாண இல்லத்தில் தங்குவதற்கான வாய்ப்பை வழங்கியது. எனவே, அந்த உயர்வான மனிதரின் வீட்டில் தங்கும் வாய்ப்பை யார்தான் தட்டிக்கழிப்பார்கள்?

யாழ்ப்பாணத்தில் லேடி இராமநாதனின் விருந்தோம்பல் மிக உயர்வாகவே இருந்தது. ஒரு தாயன்பைவிட சிறந்ததாக அவரது அன்பு காணப்பட்டது. காலையில் எம்மிடம் வருவார். இரவு சுகமாகத் தூங்கினீர்களா? புளுக்கமாக இருந்திருக்கும், நன்கு காற்று வந்ததா? என்று வாஞ்சையோடு விசாரிப்பார்.

அதன் பின்னர் பணியாள் ஒருவர் வந்து பல்துலக்கி விட்டீர்களா? என்று கேட்பார். அதன்பின்னர் காலை ஆகாரம் வந்துவிடும். காலை ஆகாரம் எடுத்துக் கொண்ட பின்னர் மீண்டும் லேடி இராமநாதன் எம்மிடம் வந்து யாழ்ப்பாணத்தில் எங்கே போகப் போகிறீர்கள் என்றெல்லாம் விசாரிப்பார். அத்துடன், காலை பத்தரை மணிக்குள் வந்துவிடுங்கள். அதன்பின்னர் வெய்யில் அதிகமாகிவிடும் என்று கூறுவார்.

ஒருவேளை லேடி இராமநாதன் ஒரு மேற்கத்தைய பெண் என்ற காரணத்தினால் அவரது இல்லத்தின் நடைமுறைகளும் ஒழுங்காக நன்கு திட்டமிட்ட முறையில் இடம் பெறுகின்றதோ என்று எண்ணினேன். ஆனால், விருந்தோம்பல் பண்பென்பது அவரிடம் சிறப்பாகவே காணப்பட்டது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் வாழ்ந்த காலத்தில் அவரது இல்லத்தில் விருந்தோம்பல் பண்பு எவ்வாறிருந்ததோ அதேபோலவே அவரது பாரியார் லேடி இராமநாதனும் தமது உயர்வான விருந்தோம்பல் பண்பை வெளிப்படுத்தினார்.

எமது நாட்டவர்கள் பலர் மேற்கத்தைய வாழ்க்கை முறையைத் தழுவியோராகவும், மேற்கத்தைய நாகரிகத்தில் மூழ்கியோராகவும் காணப்படுகின்றனர். ஆனால், அமெரிக்க பூர்வீகத்தைக் கொண்ட லேடி இராமநாதன், கீழைத்தேய நாகரிகத்தை பெரிதும் பின்பற்றி நடை, உடை, பாவனைகளில் எமது கலை கலாசாரம் வாழ்க்கைமுறை என்பவற்றை பின்பற்றி, சங்கீத விஷயத்தில்கூட எம்மவர்களைப் போன்றே கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த பற்றுடையவராக இருக்கின்றார். பிரபல சங்கீத வித்வான்களின் கச்சேரிகளை அயராது நீண்ட நேரம் அமர்ந்திருந்து இரசிக்கின்றார். லேடி இராமநாதனின் விருந்தாளிகளாக இருந்தபோது யாழ்ப்பாண வாசிகளின் விருந்தாளிகளாகவே எம்மை கருதிக் கொண்டோம்.

**யாழ்ப்பாணத்தை உருவாக்கியது கடவுள்**

யாழ்ப்பாணத்தை உருவாக்கியது கடவுள் என்று பரவலாகப் பேசப்படுவதுண்டு. யாழ் இசைக் கருவியை வாசித்த பாணன் என்ற கலைஞன் அந்த நகரை உருவாக்கினான் என்றொரு வரலாறும் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தின் சிறப்பு என்னவென்றால், அது இலங்கையின் ஒரு பகுதியாக இருக்கின்ற போதிலும் அனைத்து விதத்திலும் தமிழகத்தின் சோழ நாட்டைப் போலவே யாழ்ப்பாணம் இருக்கின்றது. எக் காலத்திலிருந்து யாழ்ப்பாணத்தவர்கள் அப்பிரதேசத்தில் வாழ்கின்றார்கள் என்பது விவாதத்துக்குரியதாக இருக்கின்றது. இலங்கைக்கு படையெடுத்த சோழர்களோடு வந்தவர்களே யாழ்ப்பாணத்தவர்கள் என்று கூறுவோரும் இருக்கின்றனர்.

இலங்கையின் ஆதி வாசிகள் தமிழர்களே. சிங்களவர்கள் பின்னர் வந்தவர்கள் என்று இன்னுமொரு சாரார் கூறுகின்றனர். இருந்தபோதிலும், இலங்கையின் வடபாகம் தமிழ் நாட்டின் ஒரு பகுதி என்பதாகவே இருக்கின்றது என்பதையும், அங்கு வாழும் தமிழர்கள் ஆயிரம் வருடங்களுக்கு முன்பதாகவே அங்கு வாழ்கின்றார்கள் என்பதையே என்னால் குறிப்பிட முடியும்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை அங்குள்ளவர்கள் கல்வியறிவில் மேம்பட்டுள்ளார்கள். இலங்கையில் கல்வியறிவு சிறப்புற்றுள்ள இடமாக யாழ்ப்பாணம் இருக்கின்றது. யாழ்ப்பாண பிரதேசத்தில் மட்டும் 56 உயர்தர பாடசாலைகள் இருக்கின்றன என்று யாரோ சொன்னார்கள். யாழ்ப்பாணத்தில் வீதிக்கு ஒரு பள்ளிக்கூடம் என்று சொல்வது தவறாகாது.

ஆங்கிலம் படித்தோர், தமிழ் படித்தோர் என்ற வித்தியாசம் யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை. படித்தோர் என்போர் தமிழைப் படித்தோராகவும் இருக்கின்றனர். எனக்கு தமிழ் சரிவரத் தெரியாது என்று கூறும் கனவான்களை நான் காணவில்லை. சென்னைக்கு வந்து ஞுரநநெ ஆயசல கல்லூரியில் படித்து பட்டம் பெற்று திரும்பிய பெண்மணிகள்கூட தமிழை மறவாதுள்ளார்கள் என்பதைவிட வேறெதனைக்கூற முடியும்? இத்தகைய பெண்களில் ஒருவர் இராமநாதன் கல்லூரியின் தலைமை ஆசிரியையாக இருக்கின்றார். இப் பெண்ணின் பெயர் இரத்தினம் செல்லையா. இவர் தலைமை தாங்கும் கல்லூரியே இராமநாதன் கல்லூரி. சேர் பொன்னம்பலம் இராமநாதனின் இல்லத்தை அண்டியதாகவே இக் கல்லூரி காணப்படுகின்றது.

(தொடரும்)

# எதிர்க்கட்சிகளின் பொய்கள் அனைத்தும் அம்பலமாகும்!

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 30

இரு தரப்பு கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு குறித்து பாராளுமன்றில் இரண்டு நாட்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது. அப்போது எதிர்க்கட்சிகளால் கூறப்படும் பொய்கள் அனைத்தும் அம்பலமாகும் - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச நிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள் இலங்கையின் கடன் மீள் செலுத்துகைத் திறன் மேம்பாடு எந்த மட்டத்தில் உள்ளது என்பதையே வெளிப்படுத்தும். மாறாக வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதா? இல்லையா? என்பதை அறிவிக்க மாட்டா. எதிர்க்கட்சிகள் இதனைத் தெரிந்து கொண்டு விமர்சனங்களை முன்வைக்க வேண்டும் என்றும் அலி சப்ரி கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2022 ஏப்ரல் 12 ஆம் திகதி எம்மால் சர்வதேச கடனில் ஒரு தொகையை மீளச் செலுத்த முடியாது என்று அறிவித்தோம். இலங்கை அரசாங்கமே இதனை அறிவித்தது. மாறாக வெளிநாட்டு நிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள் அல்ல. அதே போன்று இலங்கை அந்த நிலைமையிலிருந்து மீண்டுள்ளதா? இல்லையா? என்பதையும் நாமே அறிவிப்போம். சர்வதேச நிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள் இலங்கையின் கடன் மீள்செலுத்தல் திறன் எந்த மட்டத்தில் உள்ளது என்பதையே வெளிப்படுத்தும்.

மக்கள் மத்தியில் போலியான கருத்துக்களை பரப்பும் எதிர்க்கட்சிகள் இதனைப் புரிந்து கொண்டு, அதன் பின்னர் விமர்சனங்களை முன்வைக்க வேண்டும். இரு தரப்பு கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதால் எமக்கு 17 பில்லியன் டொலர் இலாபம் கிடைத்துள்ளது. இது எமது பொருளாதாரத்துக்கு பெரும் பலமாகும்.

எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தம் எதிர்வரும் 2ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது மாத்திரமின்றி 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் அது தொடர்பில் விவாதத்தை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் போது அரசாங்கத் தரப்பில் முழுமையான விளக்கம் வழங்கப்படும். அப்போது எதிர்க்கட்சிகளால் கூறப்படும் பொய்கள் அனைத்தும் அம்பலமாகும் - என்றார்.

(எ)

# ரயில்வே சட்டமீறல் அபராதம் மூலம் மூன்று மில்லியன் ரூபா வருமானம்!

கொழும்பு, ஜூன் 30

ரயில்வே சட்டத்தை மீறியமை தொடர்பான வழக்குகள் மற்றும் அபராதங்களினூடாக இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 3 மில்லியன் ரூபா வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் ரயில்வே பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதில் அதிகமான தொகை பயணச் சீட்டின்றி பயணித்தவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தினூடாக கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பயணச் சீட்டின்றி பயணித்த 658 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விதிக்கப்பட்ட அபராதங்களினூடாக மாத்திரம் 20 இலட்சத்து 25 ஆயிரத்து 826 ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக ரயில்வே பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் குறைந்த வகுப்புகளுக்கான பயணச் சீட்டைப் பெற்று முன்னிலை வகுப்புகளில் பயணித்த 299 பேருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனூடாக மாத்திரம் 9 இலட்சத்து 33 ஆயிரத்து 702 ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக ரயில்வே பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# வாள்களை காண்பித்து நகைகள் கொள்ளை!

## நகை கடை உரிமையாளர் உட்பட நால்வர் கைது

கொழும்பு, ஜூன் 30

வீதிகளில் பயணிப்பவர்களிடம் வாள்களை காண்பித்து அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையிடும் கும்பலுடன் தொடர்புடைய நகைக் கடை உரிமையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

மரதகஹமுல பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் நீண்ட காலமாக வீதிகளில் பயணிப்பவர்களிடம் வாள்களை காண்பித்து அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையிடும் கும்பல் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், பல்லியப்பிட்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், இரண்டு தங்கச் சங்கிலிகளை கொள்ளையிட்டு தப்பிச் செல்வதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்றபோது சந்தேக நபர்கள் இருவரும் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளானது படல்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பின்னர், பிரதேசவாசிகளின் உதவியுடன் சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீரிகம மற்றும் ஜா - எல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த கொள்ளைக் கும்பலுடன் தொடர்புடைய நகைக் கடை உரிமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, இரண்டு வாள்கள், கொள்ளையிடப்பட்டதாக கூறப்படும் நகைகள் மற்றும் கைக்குண்டு உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கூரிய ஆயுதங்களுடன் யாழில் மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

**மூன்று வாள்கள் மற்றும் இரண்டு கைக்கோடாரிகளுடன் யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் வைத்து மூவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப் பட்டனர்.**



பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய மூவர் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் கூடியிருந்த போது இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்குத் தயாராக இருந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

# வடமாகாண கூடைபந்தாட்ட பெண்கள் அணி 2ஆம் இடம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்பட்ட 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான கூடைபந்தாட்ட போட்டியில் வடமாகாண அணியுடன் மோதிய மேல்மாகாண அணி வெற்றி பெற்றது.



போட்டியின் ஆரம்பம் முதல் மேல்மாகாண மற்றும் வடமாகாண அணி வீராங்கனைகள் தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினர். இதனால் போட்டி இறுதிக் கட்டம் வரை விறுவிறுப்பாக சென்றது.

கடுமையான போட்டியின் பின்னர் 56 இற்கு 56 என்று போட்டி சமநிலையில் வர மேலதிக நேரம் 5 நிமிடம் வழங்கப்பட்டது.

மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடத்தில் 66 இற்கு 63 என்ற அடிப்படையில் 3 புள்ளிகளை அதிகம் பெற்று மேல்மாகாண அணி வெற்றியை தன் வசமாக்கியது. இறுதி வரை போராடிய வடமாகாண அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை கூடைபந்தாட்ட அணியைப் பிரதிநிதித்துவம் செய்யும் கூடைபந்தாட்ட வீராங்களைக் கொண்டு களமிறங்கிய மேல்மாகாண அணியை இறுதி வரை அச்சத்தில் வைத்துக்கொண்ட வடமாகாண பெண்கள் அணிக்கு பயிற்றுவிப்பாளர்களாக ரி. சிவதாஸ், தனுஸ்காந்த் சோபனா போன்றவர்கள் செயல்பட்டிருந்தனர்.

(எ-79)

# மீள் எழுச்சித் திட்டங்களுக்கு ஜப்பானின் துறைசார் அறிவு

## பகிரப்பட வேண்டும் என்று வடக்கு ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பெரும் அழிவிலிருந்து ஜப்பான் மீண்டெழுந்து வர காரணமாகிய அறிவு, வடக்கின் மீள் எழுச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.



ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் நிலைய (JICA) தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் ஆளுநருக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள திட்டங்களை ஆளுநருக்கு தெளிவுபடுத்தும் வகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். பிரணவநாதனும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார்.

பெரும் அழிவிலிருந்து ஜப்பான் மீண்டெழுந்து வர காரணமாகிய அறிவு, வடக்கின் மீள் எழுச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். தொழில்நுட்ப அறிவு, திறன் அபிவிருத்தி, மனிதவள முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். விவசாயம், கல்வி, டிஜிற்றல் பொருளாதாரம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, நிதி முகாமைத்துவம், ஊட்டச்சத்து திட்டங்கள், விசேட தேவையுடையோருக்கான கல்வி உள்ளிட்ட விடயங்களில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இவ்வாறான திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமது அமைப்பு தயாராக உள்ளதென தெரிவித்த JICA அமைப்பின் பிரதிநிதிகள், அவற்றுக்கு ஆளுநரின் பூரணமான ஒத்துழைப்பு அவசியம் தேவைப்படுவதாக கூறினர். திண்ம கழிவு முகாமைத்துவம், பிளாஸ்ரிக் அற்ற சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட செயல்பாடுகளையும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக JICA பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதற்காக ஜப்பான் நாட்டிலிருந்து துறைசார் அனுபவமிக்க தொண்டர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இலங்கைக்கு வரவழைக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (எ)

# அதிசக்தி வாய்ந்த 1200 கிலோ போதைப்பொருட்கள் அழிப்பு

கொழும்பு, ஜூன் 30

நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள 1,200 கிலோவுக்கும் அதிகமான போதைப் பொருட்கள் நேற்றைய தினம் அழிக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

புத்தளம் - வனாத்தவில்லுவ லெக்டொஸ் தோட்டத்தில் அமைந்துள்ள அதிசக்தி வாய்ந்த போதைப்பொருள் எரியூட்டியைப் பயன்படுத்தி இவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது, 614 கிலோ 36 கிராம் ஐஸ் போதைப்பொருள், 13 கிலோ 686 கிராம் ஹெரோயின், 581 கிலோ 34 கிராம் கெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

நேற்றுக் காலை கொழும்பு மேல் நீதிமன்றில் போதைப் பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகளால் இந்தப் போதைப் பொருட்கள் கையகப்படுத்தப் பட்டதுடன் காலை 9.30 மணியளவில் வனாத்தவில்துவ லெக்டொஸ் தோட்டத்தில் அதிசக்தி வாய்ந்த போதைப்பொருள் எரியூட்டி மூலம் அழிக்கபட்டது.

புத்தளம் நீதிவான், அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதிகள், அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகளின் மேற்பார்வையில் இந்தப் பணிகள் இடம்பெற்றதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# இழுபறி நிலையில் ரூ. 1700 சம்பள உயர்வு

கொழும்பு, ஜூன் 30

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாயாக அதிகரித்து தொழில் அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தி இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றைப் பிறப்பிக்காமல் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தோட்டக் கம்பனிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு உயர் நீதிம்ன்றத்தில் நேற்று முன்தினம் பரிசீலிக்கப்பட்டது.

அக்கரைப்பத்தனை பெருந்தோட்டக் கம்பனி உட்பட 21 கம்பனிகளால் மேன்முறையீட்டு மனுவில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனுக்கள் காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.

பின்னர் மேலதிக விடயங்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை தொழில் அமைச்சர் அண்மையில் வெளியிட்டதாக மனுதாரர் நிறுவனங்கள் தெரிவித்தன.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை வலுவழக்கச் செய்யுமாறு கோரி தாம் மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்த போதும் அதனை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தி இடைக்காலத் தடையுத்தரவு ஒன்றை வெளியிடாமல் இருக்கத் தீர்மானித்ததாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தத் தீர்ப்பு சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தோட்ட நிறுவனங்கள் உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளன. (எ)

# ஆமணக்கு விதை உண்ட 8 மாணவர்கள் பாதிப்பு!

## மன்னாரில் சம்பவம்

மன்னார், ஜூன் 30

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் தரம் - 4 ஐச் சேர்ந்த மாணவர்கள் 8 பேர் திடீர் சுகவீனம் காரணமாக வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் - 4 இல் கல்வி கற்கும் 9 வயதுடைய 8 மாணவர்கள் இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் தரம் - 4 இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் தனது வீட்டில் எண்ணெய் எடுப்பதற்காக காய வைத்திருந்த ஆமணக்கு விதைகளை பாடசாலைக்கு கொண்டு வந்து சக மாணவர்களுடன் அதை உட்கொண்ட நிலையிலேயே குறித்த மாணவர்கள் திடீர் சுகவீனமடைந்து உள்ளதாக தெரியவந்துள்ளது .

இந்த நிலையில் குறித்த 8 மாணவர்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரஷ்ய பிரஜைகளாக மாறி போரிடும் இலங்கையர்கள்

## மீட்க முடியாது என்கிறார் அலி சப்ரி



ஜனாதிபதி ஊடக மையத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உக்ரைன் - ரஷ்யா போர் முனைகளில் சிக்குண்டவர்களை மீட்டுத் தருமாறு கோரும் 446 முறைப்பாடுகள் இலங்கை

கொழும்பு, ஜூன் 30

**உக்ரைனுக்கு எதிராகப் போரிடும் இலங்கையைச் சேர்ந்த கூலிப்படையினரில் பலர் ரஷ்ய பிரஜைகளாக மாறி, அந்த நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

வெளிவிவகார அமைச்சுக்கு கிடைத்துள்ளன.

இவர்களில் பலர் ரஷ்ய பிரஜைகளாக மாறியுள்ளனர். ரஷ்ய குடியுரிமையை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இன்னுமொரு நாட்டின் பிரஜாவுரிமையை நீங்கள் பெற்றுக் கொண்டால் இலங்கையின் பிரஜாவுரிமையை நீங்கள் இழந்து விடுவீர்கள். நீங்கள் இலங்கைப் பிரஜை இல்லை என்பதால் உங்களின் சார்பில் பேசுவதற்கு எங்களுக்கு உரிமையில்லை.

சிலர் தவறாக வழிநடத்தப் பட்டுள்ளனர் போல தோன்றுகின்றது. முகாம்களில் உதவியாளர்களாகப் பணியாற்றுவதற்காக சேர்க்கப்படுவதாக தெரிவித்து சிலரை போருக்குள் சிக்க வைத்துள்ளனர். ஏனையவர்கள் தெரிந்தே இணைந்துகொண்டுள்ளனர் என அலி சப்ரி மேலும் கூறினார். (எ)



# இலங்கைக்கு வந்தது உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம்

கொழும்பு, ஜூன் 30

உலகின் மிகப் பெரிய சரக்கு விமானங்களில் ஒன்றான அன்டோனோவ் 124 (ANTONOV - 124) வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்கியது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதிப்பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கைப் படையினருக்கு எம். ஐ. 17 ஹெலிகொப்டர் ஒன்றைக் கொண்டு செல்வதற்காகவே இந்த விமானம் இலங்கைக்கு வந்தது.

2014 ஆம் ஆண்டு முதல் மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளில், இலங்கைப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கெஹலிய உட்பட 7 பேருக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 30

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 7 பேரை எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்தே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் சந்தேக நபரான மருந்துகள் விநியோகப் பிரிவின் அதிகாரியொருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (எ)

# இணையம் மூலம் நிதி மோசடி 30 சீனப் பிரஜைகள் சிக்கினர்!

கொழும்பு, ஜூன் 30

இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 30 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, இணையம் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெள்ளிக்கிழமை 137 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து பல மடிக்கணனிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார். (எ)

# வாய்க்காலுக்குள் பாய்ந்து பயணிகள் பேருந்து விபத்து

சம்மாந்துறை, ஜூன் 30

இ. போ. ச. பேருந்து ஒன்று திடீரென வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தே பயணிகளுடன் நேற்று முன்தினம் இரவு அம்பாறை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த போது நேர் எதிரே மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை மீறி பேருந்துடன் மோதும் வகையில் வந்துள்ளது.

இதன்போது, விபத்தைத் தவிர்ப்பதற்காக பேருந்தின் சாரதி சுதாகரித்து பேருந்தை நிறுத்த முற்பட்ட போது, அருகில் இருந்த வாய்க்காலுக்குள் பேருந்து பாய்ந்தது.

குறித்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் மற்றும் பேருந்து நடத்துநர் ஆகியோர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.



மேலும், இந்த விபத்து இடம்பெற்ற அம்பாறை - வங்களாவடி பிரதான வீதிக்கு வருகை தந்த போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதுடன் விபத்துக்குள்ளான பேருந்தை மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது.

அத்துடன் விபத்துக்குள்ளான பேருந்தில் 40 இற்கும் அதிகமான பொதுமக்கள் பயணம் செய்துள்ளனர்.

பேருந்து விபத்துக்குள்ளான போது சிலர் அதிர்ச்சியடைந்திருந்த நிலையில், மாற்று வாகனங்களில் அவர்கள் ஏற்றப்பட்டு அவர்களது சொந்த இடத்துக்கு அப்பகுதி மக்களின் ஒத்துழைப்புடன் அனுப்பி வைக்கப்பட்டனர். (எ)

# ஓட்டோ - மோ. சைக்கிள் மோதிய விபத்தில் சிக்கி இருவர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 30

தெல்தெனிய மற்றும் திகன பகுதிகளுக்கு இடையில் கோனவல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஓட்டோ ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது ஓட்டோ சாரதியும் மோட்டார் சைக்கிள் சாரதியும் படு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)



# கைதிகள் இருவர் தப்பியோட்டம்!

கொழும்பு, ஜூன் 30

குருவிட்ட சிறைச்சாலையிலிருந்து இரண்டு கைதிகள் வெள்ளிக்கிழமை சட்ட நடவடிக்கைகளுக்காக வரக்காபொல துல்ஹிரிய நீதிவான் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது சிறைச்சாலை அதிகாரிகளைத் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளதுடன், அவர்களைக் கண்டு பிடிக்க வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் கோனபொல பிரதேசத்தை சேர்ந்த ரொஷான் அசங்க கந்தப்பா எனவும் மற்றைய நபர் ஹொரண தவுலகலவத்தையைச் சேர்ந்த ஜே. டி. சன்ன பிரபோத எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

24 மற்றும் 29 வயதுடையவர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர்.

இவர்கள் மீது பெல்மடுல்ல, அத்தனகல்ல, ஹொரண, வரக்காபொல ஆகிய நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கைதிகளைத் தேடும் விசாரணைகளுக்காக பொலிஸ் மோப்ப நாய்களின் உதவியும் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.06.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெற்றுக் காசோலை அரசியல்?

ஜனாதிபதி தேர்தல் இன்னும் அதிகம் சூடு பிடிக்கவில்லை - காரணம், பிரதான வேட்பாளர்கள் மத்தியில், எதிர்பார்ப்புடன் நோக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் தெளிவான அறிவிப்பை வெளியிடவில்லை. தெளிவற்ற வகையில் - ஆனால், தான் ஏன் உங்களுக்கு தேவை. என்ற வாறான கதைகளையே அவ்வப்போது கூறிவருகின்றார். தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தென்னிலங்கை அரசியலில் சூழலில், எதிர் பாராத கூட்டுக்கள் ஏற்படலாம் என்னும், எதிர்வுகூறல்கள் நிலவுகின்ற போதிலும் கூட, அதற்கான நம்பிக்கையான அரசியல் அறிகுறியை இன்னும் காணமுடியவில்லை.

இந்த நிலையில் ரணிலின் நகர்வுகள் எவ்வாறு அமையும் என்பதை ஊகிப்பது கடினமாகவே இருக்கின்றது. ரணிலின் வெற்றி என்பது, ரணி லின் வியூகங்களில் மட்டுமே தங்கியிருக்கின்றது. ஏனெனில் ரணிலின் வெற்றிக்காக எந்தவொரு வெளித்தரப்பும் மல்லுக்கட்டப் போவதில்லை ஏனெனில், ரணில் அவரது ஆகக் கூடிய வாக்கு பலத்தை நிரூபிக்காத வரையில், அவரை நோக்கி எந்தளவிற்கு மற்றவர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்பது சந்தேகமே!

இவ்வாறானதொரு பின்புலத்தில் சஜித் பிரேமதாச, ஒப்பீட்டடிப்படை யில் அதிக நம்பிக்கையோடு இருப்பதாகவே தெரிகின்றது. காரணம், சஜித் தமிழ் மக்களின் வாக்குகள் தனக்கே அதிகம் கிடைக்குமென்று நம்புகின்றார். தற்போதுள்ள சூழலில், 2015இல் காணப்பட்டது போன்ற தொரு நிலைமையே காணப்படுகின்றது. மும்முனை போட்டி இடம் பெற்றால் - தற்போதுள்ள நிலையில் எவருமே ஐம்பது விகிதத்தை பெறப் போவதில்லை.

இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியை தீர்மானிக் கும் வாக்குகளாக மாறக் கூடிய வாய்ப்பு அதிகமுண்டு. 2015 நிலை மையை விடவும் தமிழ் மக்களின் வாக்குகள் அதிக முக்கித்துவமுடைய தாக இருக்கின்றது. ஏனெனில் 2015இல் தற்போது காணப்படுவது போன்றதொரு தீவிரமான மும்முனை போட்டி இடம்பெறவில்லை. அதே வேளை, அன்றைய சூழலில், ஜே.வி.பி ஓர் அரசியல் சக்தியாகவும் இருந்திருக்கவில்லை. ஜே.வி.பி தொடர்பில் எவருமே சிந்திக்கக் கூடிய நிலையில் கூட இருந்திருக்கவில்லை.

ஆனால் தற்போது நிலைமைகள் தலைகீழாக மாறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில்தான், கடந்த காலத்தில் இடம்பெற்றதை போன்று, ஈழத் தமிழ் மக்களின் வாக்குகளை வெற்றுக் காசோலையாக பயன்படுத்துவதா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. தமிழ் தேசிய தலைமைகள் என்போர், 2015இல், மைத்திரிபாலவிடம் அப்படியானதொரு காசோலையையே வழங்கியிருந்தனர். அன்று தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை வெற்றுக் காசோலையாக தாரைவார்த்த சம்பந்தன் தரப்பு, மீண்டும் அதனை செய்ய வேண்டும் என்பதற்காகவே, மல்லுக்கட்டு கின்றது.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, கடந்த காலத்திலிருந்து எதனையுமே கற்றுக்கொள்ளாத சம்பந்தன் - சுமந்திரன் அணி, மீண்டும் தங்களின் சுய இச்சைக்குட்பட்ட வகையி லேயே, தமிழ் தேசிய அரசியலை முன்னெடுக்க முற்படுகின்றது. இவ்வா றானதொரு பின்புலத்தில்தான், தற்போதைய அரசியல் சூழலிலுள்ள பல்வேறு சிக்கல்களையும், தமிழினம் எதிர்கொண்டுள்ள சவால்களையும் புரிந்து கொண்டிருக்கும், அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக் களும் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நோக்கி, தமிழ் மக்களை ஒன்றுதிரட்ட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திவருகின்றன. அந்த அடிப்படையில் செயலாற்றிவருகின்றன.

தமிழ் மக்கள் எவருக்குமான வெற்றுக் காசோலையாக இருக்க முடி யாது. இதனை புரிந்து கொண்டால், அதற்கான மாற்றுவழி தொடர்பில் ஆராய வேண்டும். மாற்றுவழி தொடர்பில் ஆராய்ந்தால், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துதை தவிர, வேறு என்ன தெரிவு உண்டு?

# பெண்ணின் சங்கிலியை பறித்த மர்ம நபர்கள்!

வவுனியா, ஜூன் 30

வவுனியாவில் வீதியால் சென்ற பெண் அணிந்திருந்த சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் அறுத்துச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கோயில்குளம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

வவுனியா, கோவில் குளம் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இருவர் அவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது ஒரு பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்ததைய டுத்து இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், கடந்த இரு தினங்களுக்கு முன்பு வவுனியா, சிதம்பரபுரம் பகுதியிலும் பெண் ஒருவரை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரது சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

(அ)

# வெடிகுண்டுடன் கைதான நபருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டமை, வாகனங்களுக்கு தீ வைத்தமை, நெல்லியடிப் பகுதியில் புடைவைக்கடை ஒன்றுக்கு பெற்றோல் குண்டு வீசியமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து சொகுசுக் கார் , மோட்டார் சைக்கிள், 2 வாள்கள் மற்றும் உள்ளூர் தயாரிப்பு வெடிகுண்டு என்பவற்றை பொலிஸார் மீட்டனர்.

குறித்த சந்தேகநபரின் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த மேலும் ஐந்து சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் , கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய வேளை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

# அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 30

அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிறைவேற்று கொடுப்பனவை 10,000 ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, 15,000 ரூபாவாக காணப்பட்ட கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் புதிய திருத்தம் நடைமுறைக்கு வரும் என குறிப்பிட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# பாம்பு தீண்டி பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் பாம்பு தீண்டியதில் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொடுக்குளாய் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான திருநாவுக்கரசு புனிதசோதி என்பவரே பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்

சம்பவ தினமன்று காலை வீட்டின் நிலப் பகுதியை துப்பரவு செய்து கொண்டிருந்தவேளை பனை ஓலைக்குள் மறைந்திருந்த பாம்பு தீண்டியதாகவும் சம்பவ இடத்திலேயே குறித்த தாய் உயிரிழந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த குடும்ப பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னையே கொல்லும் சினம்

முனைவர் என். மாதவன்.



**கோ**பம் வருகிறது என்று சொன்னால் அதன் விளைவுகளை எண்ணிப் பாருங்கள் என்று சொல்கிறார் சீன மேதை கன்பூசியஸ். இரு மனிதர்களுக்கு மத்தியில் ஏற்படும் காரசாரமான விவாதங்கள் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் பகைவர்களாகவே வாழும்படியானதாக மாற்றிவிடக் கூடிய வாய்ப்புகள் கூட உள்ளன.

**மனவெழுச்சியின் ஒரு வகையாக கோபம் வகைப்படுத்தப்படுகிறது.**

நகைச்சுவை, அழுகை, இகழ்வுறுதல், வியப்பு, அச்சம், பெருமிதம், வெகுளுதல் (கோபம்), உவகை என்று எட்டு வகையான மெய்ப்பாடுகளாக மனிதர்கள் கொள்ளும் மனவெழுச்சிகளை தொல்காப்பியம் பகிர்கிறது. எட்டு வகை மனவெழுச்சிகளிலும் கோபத்திற்கு இருக்கும் தாக்கம் என்பதே தனி.

ஒருவரின் சினம் என்ற மனவெழுச்சி அவருக்கும் பிறருக்கும் பாதிப்பை அளிக்கக் கூடிய ஒன்று. அதேநேரம் யாருக்கு யார்மேல் கோபம் வருகிறது? யார்யார் மேல் கோபம் கொள்ள இயல்கிறது? எது சரியானது? என்று பார்க்கும்போது வள்ளுவர் துணைக்கு வருகிறார்.

ஒருவர் தம்முடைய கோபம் எங்கு செல்லாது என நினைக்கிறாரோ அந்த இடத்தில் கோபப்படாமல் இருப்பது பெருமை அல்ல.

மாறாக ஒருவருடைய கோபம் எங்கு செல்லுமோ அந்த இடத்தில் கோபப்படாமல் இருப்பதே சிறந்தது என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார். மேலும், சினத்திலிருந்து தன்னை ஒருவன் காத்துக்கொள்ளாவிட்டால், அது அவனையே அழித்துவிடும் என்று எச்சரிக்கிறார்.

கோபத்தை யாரால் கட்டுப்படுத்த முடிகிறதோ அவரே வாழ்நாளில் எளிதாக வெற்றி பெறுகிறார். ஒரு முறை போர்முனையில் நெப்போலியன் தொடர் தோல்விகளால் மிகவும் சோர்வாக இருந்தான். அந்த நேரத்தில் ஒரு ஒற்றன் வந்து, 'அரசே நாம் நான்கு திசைகளிலும் பகைவர்களால் சூழப்பட்டு இருக்கிறோம்' என்று கூறுகிறான்.

நியாயமாக அந்த நேரத்தில் நெப்போலியன் கோபப்பட்டு இருக்கலாம். உடனடியாக சமயோசிதமாக நெப்போலியன், 'நல்லதாகப் போய்விட்டது, நமது வீரர்களை நான்கு திசைகளிலும் சென்று போரிடச் சொல்லலாம்!" என்று சொன்னானாம். அந்தப் போரில் நெப்போலியன் வெற்றி பெற்றதாக வரலாறு கூறுகிறது.

சோர்ந்தும் தளர்ந்தும் போயிருந்த நெப்போலியன் அந்த நேரத்தில் வேறு மாதிரி எதிர்வினையாற்றி, சினம் கொண்டிருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே.

உண்மையில் ஒருவர் மற்றொருவர் மேல் சினம் கொள்வதற்கு பல நேரங்களில் புரியாமை ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. யாரால் கோபப்பட இயலுமோ அவர்கள் பெரும்பாலும் உயர் பதவியிலோ வயதில் மூத்தவர்களாகவோ இருந்துவிடுகிறார்கள். இந்த இரண்டு காரணிகளுமே மன அழுத்தம் கொண்டவர்களாக அவர்களை மாற்றும் தன்மையானவை. ஆனால், மூத்தவர்களாகவும் பதவியில் உயர்வாகவும் இருப்பவர்களில் நல்ல அனுபவங்களோடும் சிறப்பான மனித உறவு நெறிகள் அறிந்தவர்களுமாக இருந்தால் அதனை கையாளும் விதமே தனி சிறப்பானதாக இருக்கும்.

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இயங்குகின்ற இடங்களில் பொதுவாக கோபப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகத்தான் காணப்படுகிறது. எங்கெல்லாம் வார்த்தைகள் மூலமாக புரிதல்களை ஏற்படுத்த வேண்டி இருக்கிறதோ அங்கெல்லாம் வார்த்தைகளின் உபயோகம் கவனத்துடன் அமைய வேண்டும்.

ஒரு மனிதருக்கு கோபம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்காக பின்னணியில் அவருக்கு நாம் சொல்ல வரக் கூடிய விஷயம் புரியாமல் இருக்கலாம் என்று அனுமானத்தில் அணுக முடியும். ஆனால் அதே நேரம் புரிய வைக்கிறேன் என்ற பெயரில் ஒவ்வொன்றுக்கும் குழந்தைக்குச் சொல்வது போல் விளக்கங்கள் அளித்துக் கொண்டிருக்கக் கூடாது. இது மனிதர்களின் சகிப்புத் தன்மையை சோதிப்பதாகவும் அமையலாம். அந்த விதத்தில் நாம் கோபம் என்பது ஒரு தவிர்க்க வேண்டிய மனவெழுச்சி என்ற புரிதலோடு அணுக வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இயல்பாக இருக்கக் கூடிய மனிதர்கள் கோபப்படும்போது அவருடைய நரம்புகள் கூடுதலாக முறுக்கேறி பலவீனமடைகின்றன. அந்த வகையில் உடல் நலன் கருதியும் அனைவரும் கோபப்படுவதைத் தவிர்க்கவேண்டும். ஒரு விஷயம் புரிகிறது என்று சொன்னால் அதனை புரிந்து கொண்டு செயலாற்றுவதும், அந்த விஷயம் புரியாதபட்சத்தில் அதற்கான புரிதலை கூடுதல் ஆக்கிக் கொள்வதும் கோபத்தை நெருங்கவிடாமல் செய்யும் காரணிகள்.

இதற்கான பொறுப்பை இருதரப்பும் மேற்கொண்டால் புரியாமை என்ற விஷயமே இராது. புரிதலை மேம் படுத்திக் கொண்டு கோபத்தைக் குறைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடவேண்டும். மற்றொரு கோணத்தில் தவறான புரிதலும் கோபத்திற்கான தோற்றுவாயாக அமையலாம்.

அந்த வகையில், ஒருவருக்கு இன்னொருவரைப் பற்றி தவறான புரிதல் இருக்கிறது என்று சொன்னால் அதனை சரியாகப் புரிய வைப்பதற்கான பொறுப்பை இருவரில் ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான முயற்சி இயல்பான சூழலில், இயல்பாக நிகழ வேண்டும். மாறாக, இதில் செயற்கைத் தன்மைகள் புகும்பட்சத்தில் புரியாமை அதிகரிக்கவே செய்யும்.

கோபத்தால் எந்த தரப்பும் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு வழி உள்ளது. அது தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதையர் பின்பற்றிய வழிமுறை. அவருக்கு கோபம் வந்தபோதெல்லாம் யாரிடமும் பேசாமல் இருந்துவிடுவாராம். இதனால் வார்த்தைகள் மூலம் உடனிருப்போர் காயமடையும் வாய்ப்பை அவர் தவிர்த்திருக்கிறார். இந்த தகவலை அவரது மாணவர் கி.வா.ஜகந்நாதன் 'எனது ஆசிரியர்பிரான்' என்ற நூலில் பகிர்ந்துள்ளார். இந்த உத்தி சிறப்பானதாகவும் அனைவரும் எளிதில் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறதுதானே? முயற்சிப்போம்!

## இந்தவார ராசிபலன் 30.06.2024 - 06.07.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 16
நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திதித்துவயம்

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் நல்லவர்களுடன் ஏற்படும் தொடர்பால் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். ஆழ்ந்த மனக்கவலைகள் அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். சாதுக்களின் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்திமயமாகக் கழியும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மகான்களின் தரிசனம் கிடைக்கும். சிலருக்கு வியாபாரப் போட்டிகள் காரணமாக வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள்

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் குடும்பத்தினரிடையே ஒற்றுமை ஓங்கும். மகிழ்ச்சிகரமான தருணங்களால் மனதில் சந்தோஷம் நிலவும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கும். உடன்பிறப்புகளிடம் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம்.

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்குத் திருமணம், சந்ததி விருத்தி என அனைத்தும் கை கூடிவரும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். நல்ல குரு வாய்க்கப்பெற்று அனைத்து வழிகளிலும் அறிவுத் தெளிவு ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும்,

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்கள் செயல்பாடுகளில் புதிய உத்வேகமும், உற்சாகமும் ஏற்படும். நீங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத தன வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும்.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை சுலபமாக அடைவீர்கள்.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். புதிய முயற்சிகள் மூலம், தனவரவு அதிகரிப்பதாலும், கேளிக்கைகளில் ஈடுபடுதல், இனிய பயணங்கள் என எல்லாம் நன்மையாகவே நடக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெண்களுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். அலைச்சல்களும் ஏற்படலாம்.

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற் கொள்ள நேரும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி மேலிடும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே இருந்த குழப்பங்கள் சரியாகும். மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்கான தனதுரையில் ஜனாதிபதி சொல்லியவையும் சொல்லாதவையும்!

கந்தையா அருந்தவபாலன்

கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றியிருந்தார். இவ்வாறான உரையொன்றை ஜனாதிபதி ஆற்றவுள்ளார் என்று இரு தினங்களுக்கு முன்னதாகவே ஜனாதிபதிச் செயலகம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டபோது பல்வேறு தரப்புகளிலிருந்தும் பலவாறான ஊகங்கள் வெளியிடப்பட்டிருந்தாலும் எல்லாத்தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு ஊகமாக இருந்தது என்னவெனில் ஜனாதிபதி தனது பதவிக்காலச் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி, எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப் போகிறார் என்பதாகும். எதிர்பார்த்தது போல அவர் தான் தேர்தலில் போட்டியிட உள்ளதாக வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கூட அவரின் உரை மறைமுகமாக அதனை வெளிப்படுத்தி நின்றது மட்டுமன்றி அதற்கான ஒரு உத்தியோக பூர்வ பரப்புரையாகவும் அமைந்திருந்தது என்பது அவதானிகளின் கருத்தாக உள்ளது. அவர் தனதுரையில் 2022 இல் இருண்ட யுகத்தில் இருந்த நாட்டையும் வீதியில் இறங்கிய மக்களையும் தனியொருவனாக நின்று காப்பாற்றி ஒளிமயமான ஒரு எதிர்காலத்தைத் தான் உருவாக்கியிருப்பதாகவும் அதன் உச்சமட்டச் சாதனையாக இலங்கையின் பிரதான கடன் வழங்குநருடன் மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் மூலம் நாட்டைக் கையறுநிலையிலிருந்து (வங்குறோத்து) தான் மீட்டுவிட்டதாகவும் பெருமைப்பட்டுக்கொண்டார். சிலர் ஜனாதிபதிக் கதிரைக்காகாக பாடுபட தான் நாட்டுக்காகவும் அதன் எதிர்கால அபிவிருத்திக்காகவும் பாடுபடுவதாகக் கூறிய ஜனாதிபதி 2022இல் நாடு இக்கட்டான நிலையிலிருந்தபோது அதனைப் பொறுப்பெடுக்கப் பலமுறை அழைத்தும் வராதவர்கள் அந்த நாடு எனும் குழந்தையை ஆபத்து நிறைந்த தொங்கு பாலத்தினூடாகத் தன்னந்தனியனாகத் தான் காப்பாற்றிக் கொண்டுவந்ததும் அதற்கு உரிமை கொண்டாட பலர் விழைகிறார்கள் என எதிர்த்தரப்பைச் சாடியிருந்தார். இதனை விளக்குவதற்கு அவர் 'ஹூனுவட்டயே கதாவ' எனும் பழைய சிங்கள நாடகப் பாத்திரமொன்றினை உவமையாகக் காட்டியிருந்தார்.

'ஹூனுவட்டயே கதாவ" என்பது சிங்கள நாடக எழுத்தாளரும் நடிகருமான ஹென்றி றொட்றிகோ ஜெயசேன என்பவரால் 1967இல் எழுதப்பட்ட சிங்கள நாடகமொன்று. இந்நாடகம் சீனப் புராணக் கதை ஒன்றைத் தழுவி லீ ஜிகாடோ என்பவரால் எழுதப்பட்ட சீன நாடகத்திலிருந்து ஜேர்மன் மொழிக்குச் சென்று அதிலிருந்து வுாந ஊயரஉயளயைெ ஊாயடம ஊசைஉடந என ஆங்கிலத்துக்கு மாறி அதிலிருந்து சிங்களத்துக்கு வந்த ஒரு நாடகம். இந்நாடகத்தின் மையப்பொருள் குழந்தை ஒன்று, பெற்ற தாய்க்கா அல்லது வளர்ப்புத்தாய்க்கா சொந்தமானது என்ற நீதிபதியின் தீர்ப்புத் தொடர்பானது. இரண்டு பண்ணைகளுக்கிடையேயான கலவரத்தின்போது ஒருபண்ணையின் பிரபுவின் மனைவி தங்களது செல்வங்களைப் பாதுகாப்பதற்காக தனது குழந்தையை விட்டுவிட்டு ஓடிவிடுகிறாள். அக்குழந்தையை வீட்டு வேலைக்காரி காப்பாற்றிக் கொண்டு செல்கிறாள். கொண்டு செல்லும் வழியில் உடைந்து தொங்கும் ஆபத்தான தொங்குபாலம் வழியாக மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு சென்று வளர்த்து வருகிறாள். சில ஆண்டுகளின் பின்னர் பெற்றதாயின் வேலையாட்கள் அப்பிள்ளையைக் கண்டு கைப்பற்றுகின்றனர். இப்போது வழக்கு நீதிமன்றுக்கு வருகிறது. அப்பிள்ளை யாருக்குச் சொந்தம்? பெற்றபின் விட்டிட்டு ஓடிய தாய்க்கா? அல்லது காப்பாற்றிக் கஷடப்பட்டு வளர்த்த தாய்க்கா? பெற்றதாய் உண்மையில் பிள்ளைமீது கொண்ட பாசத்தைவிட வாரிசு அடிப்படையில் அப்பிள்ளைக்கு வரக்கூடிய சொத்துமீதே அக்கறை கொண்டிருந்தாள். வளர்த்த தாயோ தான் வளர்த்த பிள்ளை மீதான அன்பு, பாசத்துக்காக பிள்ளையை வேண்டி நின்றாள். இந்நிலையில் நீதிபதி வெண்கட்டி ஒன்றினால் ஒருவட்டத்தை வரைந்தார். வட்டத்தினுள்ளே பிள்ளையை இருத்தினார். இரண்டு தாய்மாரையும் வட்டத்திற்கே வெளியே எதிரெதிராக நிறுத்தி இப்பிள்ளையை வட்டத்திற்கு வெளியே யார் இழுக்கிறீர்களோ அவர்களுக்கே பிள்ளை சொந்தம் என்றார். எதிரெதிராகப் பிள்ளையை இழுக்கும்போது பிள்ளைக்கு வலியும் வேதனையும் ஏற்படுவதை விரும்பாத வளர்ப்புத்தாய் பிள்ளையை இழுக்காதிருக்க பெற்ற தாய் பிள்ளையை வட்டத்துக்கு வெளியே சுலபமாக இழுத்து விட்டாள். பிள்ளைமீது உண்மையான அன்பும் பாசமும் கொண்டவள் வளர்ப்புத்தாய் என்பதை உணர்ந்து வளர்ப்புத் தாயிடமே அப்பிள்ளைய நீதிபதி ஒப்படைத்தார். இதுதான் 'ஹூனுவட்டய கதாவ" நாடகத்தின் கதை.

இக்கதையினூடாக ரணில் சொல்லாமல் சொல்லியது என்ன? 2022 இல் நாடு மிக மோசமான நிலையில் இருந்தபோது பொறுப்பெடுக்குமாறு எதிர்த்தரப்பை, குறிப்பாக சஜித்தை ராஜபக்ஷ தரப்பு பலமுறை அழைத்தபோதும் பெற்ற தாயைப்போல உதறித்தள்ளிவிட்டுச் சென்றுவிட்டு இப்போது நான் வளர்த்த தாயைப்போல மிகவும் கஷடப்பட்டு நாட்டைக் காப்பாற்றிவிட பதவிக்காக உரிமை கோரி நிற்கிறார்கள். "அவர்கள் பதவிக்காகப் போராடுகிறார்கள். நான் நாட்டுக்காகப் போராடுகிறேன். அவர்கள் தமக்குக் கிடைக்கும் பதவி, பட்டங்கள் பற்றிக் கனவு காணுகிறார்கள். நானோ நாட்டின் வளர்ச்சி பற்றிக் கனவு காணுகிறேன்."எனவே மக்களே நீங்கள் அந்த நீதிபதி போல நின்று பதவிக்காக யாசிப்பவர்களை ஒதுக்கிவிட்டு நாட்டை நேசிக்கும் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய முன்வரவேண்டும் என்பதே ரணில்



**இன்று ரணிலை விமர்சிக்கும் சஜித் ரணிலின் இடத்திலிருந்தாலும் இதுதான் நிலைமை. அரசியலுக்காக யாரும் எதுவும் பேசினாலும் இதுவே இலங்கையின் இன்றைய நிலை.**

சொல்லாமல் சொல்லிய விடயமாகும்.

ரணில் குறிப்பிடுவதுபோல உண்மையில் நாடு மீண்டுவிட்டதா? குறைந்தது 2022 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைக்கேனும் வந்துவிட்டதா என்று ஆழமாக நோக்கினால் இல்லை என்பதே பொருளாதார வல்லுனர்களதும் சர்வதேச ஆய்வு நிறுவனங்களதும் விடையாக உள்ளது. உயிர்பிரியும் தறுவாயில் இருந்த ஒருவரை அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து ஒட்சிசன், குழுக்கோசு மற்றும் செறிவான மருந்துகள் மூலம் தற்காலிகமாக பிழைக்க வைத்திருப்பதைப் போன்றதே நாட்டின் தற்போதைய நிலை. சர்வதேச நாணய நிதியத்தின் கடன்வசதி, இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அதிகரிக்கப்பட்ட விலைகள், கட்டணங்கள், மற்றும் புதிய வரி அறவீடுகள், அரச நலன்புரிச் செலவுகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான செலவுகளில் வெட்டு போன்றவற்றால் நாட்டின் பொருளாதாரம் தாங்கிப் பிடிக்கபடுகிறதே அன்றி இயல்பான பொருளாதாரக் காரணிகளால் அது தாங்கிப் பிடிக்கப்படவில்லை என்பதே யதார்த்தமாகும். ஆபத்தான தொங்கு பாலத்தின் மூலம் நாடெனும் பிள்ளையைக் காப்பாற்றி விட்டதாகக் கூறினாலும் அந்த ஆபத்தான தொங்குபாலம் எந்நேரத்திலும் அறக்கூடிய நிலையில் அப்படியேதான் இருக்கிறது என்பதை ரணிலால் சொல்லமுடியாது.

நாட்டில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கத்தை 9 சதவீதமாக்க் குறைத்துவிட்டதாகப் பெருமைப்படும் ரணில் அந்த உயர்வான பணவீக்கத்தினால் பன்மடங்கு அதிகரித்துவிட்ட பொருட்களின் விலைகளும் அதனால் ஏற்பட்ட வாழ்க்கைச்செலவு அதிகரிப்பும் ஏன் குறையவில்லை என்றோ அல்லது உயர்ந்த வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் ஊதிய அதிகரிப்பை வழங்கியதாகவோ ஏன் சொல்ல முடியவில்லை. தற்போது விலையேற்றம் கட்டுப்பாடாக இருக்கலாம். ஆனால் ஏறிய வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கு அல்லது அதனை ஈடுசெய்வதற்கான எந்த வழிவகைகளும் காணப்படவில்லை. ஏற்றுக்கொள்ள முடியாத வரிமுறைமை, அத்தியாவசியப் பொருட்களின் விலையதிகரிப்புகள் மூலம் நுகர்வுக்கான கேள்வியைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தைக் குறைப்பது ஆரோக்கியமான அணுகுமுறையாக இருக்க முடியாது. இன்று நாட்டில்சுமார் 25 சதவீதத்தினர் அதாவது நாலிலொரு பங்கு மக்கள் முழு வறுமையில் வாடுகின்றனர் என்பதை ரணில் சொல்லவில்லை.

ரணில் தனதுரையில் மிகவும் சிலாகித்துக் கூறிய ஒருவிடயம் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டோம் என்பது. ஆனால் இது தொடர்பாக பல மறைப்புகளும் ஐயங்களும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. கடன்மறுசீரமைப்பில் முதலில் 50வீத கடன் தள்ளுபடி எனக்கூறப்பட்டது. பின்னர் அது 28 வீதம் எனக் கூறப்பட்டது. ஆனால் ஒப்பந்தத்தில் அது 7 வீதம் மட்டுமே உள்ளது. இந்த 7 வீதம் என்பது யானைப்பசிக்குச் சோளப்பொரி போன்றது. இதற்கு மேலாக 2028 வரை கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் 2043 வரை அதனை அடைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிது. 2028 க்கு இன்னும் மூன்று ஆண்டுகள் மட்டுமே உள்ளன. பலவீனமான பொருளாதார நிலவும் இன்றைய நிலையில் இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் இலங்கை அரசு தனது படுகடனை மீளச்செலுத்தும் வல்லமையைப் பெற்றுவிடுமா என்பது ஐயமே. கோத்தாபயவின் கொள்கைகளாலும் கொரோனா மற்றும் அரசியல் குழப்பங்களாலும் படுத்துவிட்ட நாட்டின் பல உற்பத்தித் துறைகள் இன்னும் எழும்ப முடியாமல் தள்ளாடுகின்றன. பல தொழிலிலிருந்து அகன்று விட்டன. தொழில் வல்லுனர்களும் புத்திஜீவிகளும் நாளாந்தம் நாட்டைவிட்டு ஓடிக்கொண்டிருக்கின்றனர். நாட்டில் புரையோடிப் போயுள்ள ஊழல், அதிகார முறை கேடுகள், வளவிரயம் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த உருப்படியான திட்டமும் இதுவரை முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் ரணிலின் எண்ணம் நிறைவேறுமா?

அதே போல 2028 இற்குப் பின்னர் சலுகை அடிப்படையில் கடனை மீளளிக்க முடியும் என்று ரணில் கூறினாலும் எத்தகைய சலுகைகள் என்பதை ஒப்பந்தமும் கூறவில்லை. ரணிலும் கூறவில்லை. இதற்கு மேலாக வெளிநாட்டுத் தனியார் கடன்வழங்கிய தரப்புகளுடன் எத்தகைய இணக்கப்பாடும் இன்னும் எட்டப்படவில்லை. இலங்கை அரசின் மொத்தப்படுகடன் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியினளவைவிடக் கூடுதலானது. நாட்டின் வருமானத்தைவிட செலவு கூடுவது இயல்பானது. ஆனால் இங்கு கூடியிருப்பது அரசின் கடன் என்பதே பிரச்சினையானது. வளர்ந்த நாடுகளிலும் அரசபடு கடன் உயர்ந்த மட்டத்திலிருந்தாலும் அக்கடன்கள் நாட்டின் உற்பத்தி இயலளவையும் சமூகநலனையும் மேம்படுத்தும் வகையில் முதலீடுகளாக மாற்றப்படுகின்றன. ஆனால் இங்கு வெள்ளை யானையை கட்டி வளர்ப்பது போல மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்ட துறைமுகம், தாமரைக் கோபுரம் போன்றவற்றுக்கே வீண்டிக்கப்படுவதுடன் கடனை அடைப்பதற்கான கடனாகவும் அமைவதால் நாடு கடனிலிருந்து மீளும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. இதனால்நாட்டின் அபிவிருத்திபற்றிய ரணிலின் கனவு மட்டுமன்றி அவரது ஜனாதிபதிக் கனவும் கூட கனவாகிப் போய்விடுமோ என்ற ஐயமே பரவலாகக் காணப்படுகிறது. அவ்வாறு கனவாகிப் போகவேண்டுமென்பது எதிர்க்கட்சிகளின் கனவாக உள்ளது.

எதிர்கட்சிகளைப் பொறுத்த மட்டில் அல்லது ஜனாதிபதி வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் ரணிலின் நடவடிக்கைகளை விமர்சிக்கிறார்களே அன்றி நாட்டை மீட்டெடுப்பதற்கான தங்களது முன்னேற்றமான திட்டம் என்ன என்பது பற்றி யாரும் இதுவரை முன்வைக்கவில்லை. சர்வதேச நாணயத்தின் நிபந்தனைகளுக்கு ரணில் ஆடுகிறார் எனக்கூறும் சஜித்தோ அல்லது அனுரவோ தாங்கள் பதவிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதைக் கூறுவதில்லை. நாட்டுக்குப் பாதகமில்லாத வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைக்கப் போவதாக கூறும் சஜித் வேண்டுமென்றே ரணில் நாட்டுக்குப் பாதகமான நிபந்தனகளை வலிந்து புகுத்திவிட்டார் எனச் சொல்லவருகிறாரா? இக்கட்டான அந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தை விட்டால் கரையேறுவதற்கு வேறு துடுப்பு ஏதும் இலங்கைக்கு இருக்கவில்லை என்பதுவும், அந்நிறுவனத்திடம் கடன் பெறும்போது அது விதிக்கும் கடுமையான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுவும் மறுக்கமுடியாத உண்மை. இன்று ரணிலை விமர்சிக்கும் சஜித் ரணிலின் இடத்திலிருந்தாலும் இதுதான் நிலைமை. அரசியலுக்காக யாரும் எதுவும் பேசினாலும் இதுவே இலங்கையின் இன்றைய நிலை. இதனால் ரணில் மட்டுமல்ல எந்த வேட்பாளரும் சொல்லும் விடயங்களை மட்டுமல்ல சொல்லாமல் மறைக்கும் விடயங்களையும் கவனித்திற் கொள்ளவேண்டியது மக்களின் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2026இல் விஜய் நாம் தமிழருடன் கூட்டணி அமைக்க திட்டமா?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் பேசிய நடிகரும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய், நல்ல தலைவர்களுக்கான தேவை இருக்கிறது என்கிறார். அவரது இந்தப் பேச்சு தனித்துப் போட்டியிடும் அவரது விருப்பத்தை உணர்த்துகிறதா?

நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை ஆரம்பித்த பிறகு அவரது ஒவ்வொரு கருத்தும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடும் என்று கூறப்படும் நிலையில், இன்று அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் விஜய் தெரிவித்த சில கருத்துகள் விவாதத்திற்கு உள்ளாகியிருக்கின்றன.

### விஜய் பேசியது என்ன?

சென்னை திருவான்மியூரில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் நடந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் பேசிய விஜய், பொதுவான சில கருத்துகளைப் பேசியதோடு கவனிக்கத்தக்க சில விஷயங்களையும் குறிப்பிட்டுப் பேசினார்.

"தமிழ்நாட்டில் உலகத்தரத்திலான மருத்துவர்கள், பொறியாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால், இங்கே எது அதிகமாகத் தேவைப்படுகிறதென்றால், நல்ல தலைவர்கள்தான். நான் அரசியல் தலைவர்களை மட்டும் சொல்லவில்லை. எல்லாத் துறைகளிலும் சொல்கிறேன். எதிர்காலத்தில் அரசியலும் ஒரு பணி வாய்ப்பாக ஏன் வரக்கூடாது? அப்படி வர வேண்டுமென்பதே என் விருப்பம்."

'நீங்கள் தினமும் செய்தித்தாள்களைப் படியுங்கள். ஒரே செய்தியை வெவ்வேறு நாளிதழ்கள் வெவ்வெறு மாதிரி எழுதுவார்கள். எல்லாவற்றையும் பாருங்கள், படிங்கள். எது உண்ம, எது பொய் என ஆராயுங்கள். அப்போதுதான் நாட்டில் என்ன பிரச்னை, மக்களுக்கு என்ன பிரச்னை, சமூகத் தீமைகள் பற்றியெல்லாம் தெரிய வரும். அதைத் தெரிந்துகொண்டால், ஒரு சில அரசியல் கட்சிகள் செய்யும் பிரசாரங்களை நம்பாமல், எது சரி, எது தவறு, எது உண்மை, எது பொய் என்பதைத் தெரிந்துகொண்டு, நல்ல தலைவர்களைத் தேர்வுசெய்யும் விசாலமான பார்வை வரும்.

'சமீப காலத்தில் தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவது அரசின் கடமை, இளைஞர்களைக் காப்பாற்றுவது அரசின் கடமை, ஆளும் அரசு தவறவிட்டுவிட்டார்கள் என்று பேச வரவில்லை. அதற்கான மேடையும் இதுவல்ல. சில நேரங்களில் நம் வாழ்வை நாம்தான் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று பேசியிருக்கிறார் விஜய்.

இதில் நல்ல தலைவர்கள் தேவை என அவர் குறிப்பிட்டது, ஊடகங்கள் மீதான அவரது விமர்சனம், போதைப் பொருளிலிருந்து காப்பது அரசின் கடமை என்பன போன்ற கருத்துகள் சமூக ஊடகங்களில் கவனிப்பிற்கும் விவாதத்திற்கும் உள்ளாகியிருக்கின்றன.

விஜயின் பேச்சு குறித்து கருத்து கூறிய மூத்த பத்திரிகையாளரான குபேந்திரன், 'அவரது பேச்சை வைத்துப் பார்த்தால், விஜய் தி.மு.கவுக்கு எதிரான மனநிலை தனக்கு இருப்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். அதுதவிர, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு ராகுல் காந்தி, திருமாவளவன், சீமானுக்கு வாழ்த்து சொன்னவர், தமிழ்நாட்டில் நாற்பது இடங்களிலும் வெற்றி பெற்ற கூட்டணியின் தலைவரான முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு சொல்லவில்லை."

"ஆனால், ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என நினைப்பவர், ஆளும் கட்சியை எதிர்த்துத்தான் அரசியல் செய்ய முடியும். இருந்தபோதும், மக்கள் பிரச்னைக்கு அவர் எப்படி, எவ்வளவு தீவிரமாகச் செயல்படுவார் என்பதை வைத்துத்தான் அவரது அரசியல் எதிர்காலம் தீர்மானமாகும்," என்கிறார்.

### நாம் தமிழருடன் கூட்டணியா?

இதற்கிடையில், தனியார் சேனல் ஒன்றுக்குப் பேட்டியளித்த நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், 2026ஆம் ஆண்டு தேர்தலில் விஜய்யுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதைக் கோடிட்டு காட்டும் வகையில் பேசியிருக்கிறார்.

நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகளிடம் கேட்டால், இதெல்லாம் மிகவும் ஆரம்பக் கட்டம் என்கிறார்கள்.

'வரவிருக்கும் 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இரு கட்சிகள்தான் தனித்து நிற்கின்றன. தமிழக வெற்றிக் கழகத்தைப் பொறுத்தவரை எங்கள் அனுபவம் தேவைப்படலாம். எங்களுக்கும் துடிப்புமிக்க இளைஞர்களின் கூட்டு தேவைப்படுகிறது.

ஆகவே, இரு பிரிவினரும் எதார்த்தமாகவே நெருக்கமாக இருக்கிறோம். இப்போதைக்கு இதைத்தான்



சொல்ல முடியும்," என்கிறார் நாம் தமிழர் கட்சியின் சர்வேதச பொறுப்பாளரான பாக்கியராசன்.

அப்படி ஒரு கூட்டணி அமைந்தால், அதிமுகவும் அந்தக் கூட்டணியில் ஆர்வம் காட்டக்கூடும் என்கிறார் குபேந்திரன்.

'விஜய்யின் பிறந்தநாளுக்கு பலத்த வாழ்த்துகளைச் சொல்கிறார் எடப்பாடி கே. பழனிச்சாமி. கள்ளக்குறிச்சிக்கு விஜய் சென்றதற்கு வாழ்த்து சொல்கிறார் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார். எப்படியாவது தி.மு.கவை தோற்கடிக்க வேண்டும் என்ற தவிப்பில் உள்ள அதிமுகவுக்கு விஜய் நிச்சயம் தேவைப்படுவார்."

ஆனால், 'அப்படி ஒரு கூட்டணிக்கு விஜய் ஒப்புக் கொள்வாரா என்பது தெளிவாகவில்லை. அந்தக் கூட்டணியில் சீமான் இருப்பாரா என்பதையும் இப்போது சொல்ல முடியாது. அப்படி ஒரு கூட்டணி அமைந்தால், தொகுதிப் பங்கீட்டில் ஆரம்பித்து முதல்வர் யார் என்பதுவரை மூன்று தரப்புமே இறங்கிவர வேண்டியிருக்கும்" என்கிறார் குபேந்திரன்.

நாம் தமிழர் வட்டாரங்களில் வேறு ஒரு விஷயத்தையும் சொல்கிறார்கள். அதாவது சமீபத்தில் விஜய்யும் சீமானும் சந்தித்துப் பேசியதாகவும் வேறு சிலரையும் கூட்டணி சேர்த்துக்கொண்டு தேர்தலைச் சந்திக்கலாம் என விஜய் கூறியதாகவும் தேர்தல் நெருக்கத்தில் அதை முடிவு செய்யலாம் என சீமான் கூறியதாகவும் சொல்கின்றனர்.

ஆனால், இதற்கெல்லாம் முற்றிலும் மாறான ஒரு கருத்தை முன்வைக்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

'விஜய்யை பொறுத்தவரை தனித்துக் களம் காணவே விரும்புவார். அவர் முதல் முறையாகக் களமிறங்குவதால் தனது வாக்கு வங்கியின் பலத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவார். சீமானை பொறுத்தவரை அவரது வாக்கு வங்கி பத்து சதவீதத்திற்குக் கீழேதான் இருக்கிறது. ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு அதை உயர்த்த மிகுந்த முயற்சியும் காலமும் தேவை. ஆகவே கூட்டணி அமைக்க விரும்புகிறார்," என்று தெரிவிக்கிறார் அவர்.

மேலும், 'வரவிருக்கும் 2026 தேர்தல் களம் தி.மு.கவுக்கு எதிரானது. பா.ஜ.க. இன்னொரு கூட்டணியாக இருக்கும். அந்த இரண்டிலும் சீமான் இடம்பெற முடியாது. எனவே, அதிமுக., விஜயுடன் இணைந்து களம் அமைக்க அவர் விரும்பலாம். ஆனால், விஜய் தனித்துப் போட்டியிடவே வாய்ப்பு அதிகம். தன்னுடைய இன்றைய பேச்சில் விஜய் அதைத்தான் உணர்த்தியிருக்கிறார். அதாவது, நல்ல தலைவர்கள் தேவை என்கிறார். இப்போதுள்ள தலைவர்களை விட்டுவிட்டு, அத்தகைய நல்ல தலைவராக வர அவர் விரும்புகிறார் என்பதைத்தான் அது சுட்டிக்காட்டுகிறது. 2026ஆம் ஆண்டின் துவக்கத்தில் இதெல்லாம் தெளிவாகும்," என்கிறார் ஷ்யாம்.

விஜய் தரப்பைப் பொறுத்தவரை வேறு சில கணக்குகளும் இருக்கின்றன. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுக - அதிமுக ஆகிய இரு கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளின் மொத்த சதவீதம் சற்று குறைந்து, நாம் தமிழர், பாஜக ஆகியவை குறிப்பிடத்தக்க வாக்கு சதவீதத்தைப் பெற்றிருப்பதைக் கவனிக்கும் அவர்கள், இரு திராவிடக் கட்சிகளும் இழக்கும் வாக்குகளின் பெரும்பகுதியைப் பெற நினைக்கிறார்கள்.

இது தவிர, விஜய் களத்தில் இறங்கினால், பட்டியலின, சிறுபான்மையினர் வாக்குகளும் திராவிடக் கட்சிகளிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கும் என நம்புகிறார்கள். இதுதவிர, புழுயுவு படம் வெளியான பிறகு, தீவிர அரசியலை விஜய் கையிலெடுப்பதோடு, மாநாடு ஒன்றையும் நடத்தக்கூடும் என்கிறார்கள்.

### விஜய் உரையின் முக்கிய அம்சங்கள்

"நல்ல தலைவர்கள்தான் தமிழ்நாட்டில் இல்லை," என்றும், "நன்கு படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும்," என்றும், தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவரும், நடிகருமான விஜய் மாணவர்கள் மத்தியில் பேசியுள்ளார்.

மேலும், போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் கடமையாக இருந்தாலும் சில விஷயங்களிலிருந்து நாம்தான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

விஜய் சொன்ன கருத்துகள் பொதுவான வாதமாக இருப்பதாகவும் நேரடியான குற்றச்சாட்டு இல்லை என்றும் தி.மு.க-வினர் கூறி வருகின்றனர். விஜய்யின் பேச்சுக்கு ஆதரவு தெரிவித்துள்ள சீமான், இதைக் கூட்டணிக்கான அஸ்திவாரமாக எடுத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

### மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்வு

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதி வாரியாக, 10 மற்றும் 12-ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பாகப் பரிசு மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி, சென்னை, திருவான்மியூரில் உள்ள தனியார் மண்டபத்தில் ஜூன் 28, வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கடந்தாண்டு இந்நிகழ்வு விஜய் மக்கள் இயக்கம் சார்பாக நடைபெற்றது. இந்தாண்டு, இந்நிகழ்ச்சி இரு கட்டங்களாக நடைபெறுகிறது. இதன் இரண்டாம் கட்டம் வரும் ஜூலை 3 அன்று நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விஜய் நாங்குநேரி சாதிய வன்முறையில் பாதிக்கப்பட்டு, 12-ஆம் வகுப்பில் 469 மதிப்பெண்கள் பெற்ற மாணவர் சின்னதுரையின் அருகில் அமர்ந்திருந்தார்.

பின்னர், இந்நிகழ்ச்சியில் விஜய் உரையாற்றி, மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

### விஜய் உரையின் சிறப்பம்சங்கள்

வாழ்க்கையில் நாம் என்னவாகப் போகிறோம் என்பது குறித்த தெளிவு பலருக்கும் இருக்கலாம். ஆனால், சில மாணவர்களுக்கு எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்பதில் தொய்வு இருக்கலாம். எல்லா துறையும் நல்ல துறைதான், அதில் நீங்கள் முழு ஈடுபாட்டுடன் 100 வீத உழைப்பைச் செலுத்தினால் யாராக இருந்தாலும் வெற்றி நிச்சயம். எந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து பெற்றோர்கள், ஆசிரியர்களுடன் ஆலோசியுங்கள்.

பொறியியல், மருத்துவம் மட்டுமே நல்ல படிப்பு இல்லை. தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவர்கள் உள்ளனர். ஆனால், நல்ல தலைவர்கள்தான் தமிழ்நாட்டில் இல்லை. இன்னும் நமக்கு நிறைய தலைவர்கள் தேவைப்படுகின்றனர். அரசியலும் ஏன் ஒரு துறையாக வரக்கூடாது? அப்படி வரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

"நன்கு படித்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டுமா, வேண்டாமா?" என விஜய் கேள்வி எழுப்பினார். அப்போது, அரங்கிலிருந்தவர்கள் ஆரவாரம் செய்ததையடுத்து, "உங்களின் ஆர்வம் புரிகிறது, இப்போதைக்குப் படியுங்கள், மற்றதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்," எனத் தெரிவித்தார்.

மறைமுகமாகவே நீங்கள் அரசியலில் ஈடுபடலாம் எனக் கூறிய விஜய், ஒரு செய்தியை பல செய்தித்தாள்கள் எப்படி வெவ்வேறு விதமாக கையாள்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

சமூக ஊடகங்கள் நல்லவர்களைக் கெட்டவர்களாகவும், கெட்டவர்களை நல்லவர்களாகவும் காண்பிக்கின்றனர். அதையெல்லாம் படியுங்கள், ஆனால் எது உண்மை, எது பொய் என்பதை ஆராய கற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் நாட்டில் என்ன பிரச்னைகள் உள்ளன, சமூகத் தீமைகள் குறித்து உங்களுக்குத் தெரியும். சில கட்சிகளின் பொய்யான பிரசாரங்களை நம்பாமல், நல்ல தலைவர்களை தேர்ந்தெடுக்கும் விசாலமான பார்வை கிடைக்கும். அதுதான் சிறந்த அரசியல், என்றார்.

நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நண்பர்கள் தவறான பழக்கங்களில் ஈடுபட்டால் முடிந்தால் அவர்களை நல்வழிப்படுத்த பாருங்கள். தவறான பழக்கங்களில் ஈடுபடக் கூடாது. தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் பயன்பாடு இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அதை கட்டுப்படுத்துவது அரசின் கடமை, இளைஞர்களை காப்பாற்றுவது அரசின் கடமை, இப்போது ஆளும் அரசு அதைத் தவற விட்டுவிட்டார்கள் என்பதை நான் பேச வரவில்லை, அதற்கான மேடையும் இதுவல்ல. சில சமயங்களில் அரசாங்கத்தைவிட நம் பாதுகாப்பை நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தேர்வில் தோல்வியடைந்தவர்கள், நினைத்த மதிப்பெண்களை பெற முடியாதவர்கள் விரக்தி அடைய வேண்டாம். வெற்றி, தோல்வியை சமமாக பாவிக்கக் கற்றுக்கொண்டால், தோல்வி நம்மிடம் வருவதற்கு பயப்படும். வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பது தொடர்கதை அல்ல, என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் கட்சிகளை உள்வாங்கும் தேசிய வேட்பாளராக ரணில்? திரண்ட தமிழ்த் தேசிய கட்சிகளின் தமிழ்ப் பொதுவேட்பாளர் யார்?

பனங்காட்டான்

இந்த வருடத்தில் நடைபெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு ஆரம்பித்து விட்டது. அச்சு வேலைகளுக்கு தயாராக இருக்குமாறு அரசாங்க அச்சகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 16க்குள் தேர்தல் இடம்பெறுமென ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது. அக்டோபர் 5ல் தேர்தலை நடத்த ரணில் விரும்புவதை அவரது ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்து வருகிறது.

தேர்தல் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு யூலை நடுப்பகுதியை அடுத்து வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது. சஜித் பிரேமதாசவும், அநுர குமார திசநாயக்கவும் தங்கள் பரப்புரைகளை ஆரம்பித்துவிட்டனர். தமிழர் தரப்புடன் உரையாடும்போது 13வது திருத்தம், மாகாண சபை அதிகாரம் என்பவையே இவர்களால் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. ஆனால் தெற்கில் ரணிலை நேரடியாக இலக்கு வைத்து பரப்புரை இடம்பெறுகிறது. எல்லா வகையிலும் ரணிலை தோற்கடிக்க வேண்டுமென்பது இவர்கள் இருவரதும் இலக்காக உள்ளது.

ரணில் தமது செயற்பாடுகளை வேகமாகவும் விவேகமாகவும் மேற்கொண்டு வருகிறார். தேர்தல் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வருவதற்கு முன்னர், உறுமய திட்டத்தின் கீழ் மேலும் பல்லாயிரம் பேருக்கு காணி உரிமங்களை வழங்குவது இவரது முன்னுரிமை.

ரணில் தேர்தலை நடத்துவாரா, பின்போடுவாரா, போட்டியிடுவாரா, இறுதி நேரத்தில் விலகுவாரா என்னுறு வதந்திகள் பலவாறாக வந்தாலும், அவர் போட்டியிடுவார் என்பதற்கு சாதகமான சிலவற்றை அவதானிக்க முடிகிறது. சகல மாவட்டங்களுக்கும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு வருகிறார். முக்கியமாக, இளையோரையும் மாணவர்களையும் சந்தித்து அவர்களுடன் உரையாடி நம்பிக்கையை ஊட்டி வருகிறார். நாட்டை மீட்டதாகக் கூறுவதோடு வளமான எதிர்காலத்துக்கும் போதனை நிகழ்த்துகிறார். நேரடியாக எவரது பெயரையும் குறிப்பிடாது அவர்களின் செயற்பாடுகளை போலித்தனமானவை எனச் சாடுகிறார். கடந்த சில நாட்களாக புரியும் வகையில் தாம் போட்டியிடப் போவதை பின்வருமாறு வெளிப்படுத்தி வருகிறார்.

• நீங்கள் என்னுடன் சேர்ந்து எதிர்காலத்தை முன்னேற்ற விரும்புகிறீர்களா? அல்லது இருட்டுக்குள் போராடுபவர்களுடன் போக விரும்புகிறீர்களா? என்னுடன் பயணிக்க விருப்பமுண்டா? அல்லது அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா? என்று கடந்த 24ம் திகதி ஆற்றிய உரையில் கேள்வி எழுப்பியிருந்தார். இது எதனைக் குறிக்கிறது?

• எங்கள் நாட்டின் மீதான நம்பிக்கையை சர்வதேசத்தில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளேன். இதனை மறுதலிக்கும் ஜனரஞ்சகவாதிகளின் சொல்லாடல்களில் ஏமாறப் போகிறீர்களா என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதன் அர்த்தம் என்ன? (நாட்டை சர்வதேசத்திடம் மீள முடியாதளவுக்கு அடகு வைத்ததை மறைத்துவிட்டார்)

• கொழும்பின் தினசரி ஒன்றில் கட்டணம் செலுத்தி பெட்டி கட்டிய பிரமாண்ட விளம்பரம் ஒன்றின் வாசகம், இந்த நேரத்தில் ரணில்தான்!; என்று கச்சிதமான கவர்ச்சி வர்ணத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இப்போது இது எதற்காக?

• இது போதாதென்று, நற்செய்தி வேண்டுமா, கெட்டசெய்தி வேண்டுமா; என்று பொதுமக்களுக்கு அச்சமூட்டும் கேள்வியை முன்வைத்துள்ளார் அமைச்சர் மனுஷ நாணயக்கார. (சஜித் பிரேமதாச அணியிலிருந்து ரணில் பக்கம் தாவி அமைச்சர் பதவி பெற்ற இருவரில் இவர் ஒருவர்) ரணில்தான் நற்செய்தி தருவார் என்பதன் மறைவார்த்தை இது.

ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதை உறுதி செய்யும் வகையிலான இந்த அறிவித்தல்கள், பின்னால் வரும் யானையின் முன்னால் வரும் மணியோசை.



அறகலய போராட்ட வேளையில் ஏற்றுக் கொண்ட பிரதமர் பதவியை விட்டு விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தை எழுதினாலும், அதனைக் கையளிக்க அப்போதைய ஜனாதிபதி (கோதபாய) கப்பலில் தஞ்சம் புகுந்து நாட்டைவிட்டு ஓடியதால் முடியாது போனதாக புதுக்கதை அவிழ்க்கும் ரணில் விக்கிரமசிங்க, அவ்வழியாக வந்த ஜனாதிபதிக் கதிரையை தொடர்ந்து தக்க வைப்பதற்காக சிங்கள தேசிய பொதுவேட்பாளராக களமிறங்கப் போகிறாராம்.

பிரதமர் பதவியை அறகலய போராட்ட காலத்தில் தாம் ஏற்க வேண்டி நேர்ந்ததை சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை இளம் சட்ட வல்லுனர்களுடன் நடத்திய சந்திப்பில் எடுத்துக்கூறியபோது சுவையான புதுக்கதை ஒன்றை அறிய முடிந்தது. அதனை பின்வருமாறு கூறியிருந்தார்.

'அன்று பிரதமர் பதவியை யாரும் ஏற்க முன்வரவில்லை. ஜனாதிபதி (கோதபாய) கப்பலில் ஏறி திருகோணமலை சென்றபோது சிலர் என்னை பிரதமர் பதவியிலிருந்து விலகச் சொன்னார்கள். பெரும்பான்மை உள்ள ஒருவர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் பதவி விலக முடியாது என்று கூறினேன். பதவி விலகுவதற்கான கடிதத்தை எழுதினாலும் அதனை ஜனாதிபதியிடமே கையளிக்க வேண்டும். ஜனாதிபதி (கோதபாய) கப்பலில் தஞ்சம் புகுந்திருந்த காரணத்தாலும், நாட்டைவிட்டு மாலைதீவுக்குச் சென்றதாலும் என்னால் அந்தக் கடிதத்தை வழங்க முடியாது போனது. அன்று நான் பதவி விலகியிருந்தால் ஜனநாயகத்துக்கு முரணாக எவராவது நாட்டைக் கைப்பற்றியிருப்பார்கள்."

இந்தக் கூற்றில் விநோதமான விண்ணானம் தென்படுகிறது. ஜனாதிபதி (கோதபாய) நாட்டைவிட்டு ஓடியதால் தனது ராஜினாமா கடிதத்தை கையளிக்க வசதியில்லாது போனது என்று கூறுவது, நேற்றுப் பிறந்த குழந்தைகூட நம்பக்கூடியதாக இல்லை. அந்த இளம் சட்ட வல்லுனர்கள் எவ்வாறுதான் இந்தக் கூற்றை உள்வாங்கினார்களோ தெரியாது.

எதுவோ, இப்போது அமர்ந்திருக்கும் அந்த ஆசனத்தை அடுத்த ஐந்து வருடங்களுக்கு தமதாக்கிக் கொள்ளும் அனைத்து வழிமுறைகளையும் ரணில் மேற்கொண்டு வருவது தெரிகிறது. அதற்காக தம்மால் முன்மொழியப்பட்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சபையுடனும், அரசியலுக்கு அப்பாற்பட்ட நீதிபரிலான சேவையுடனும்கூட நேரடியாக மோத ஆரம்பித்துள்ளார்.

இந்தப் பின்னணியூடாகப் பார்க்கையில் சிங்களத் தரப்பின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளிழுத்த நிரந்தரமில்லாத கூட்டின் வேட்பாளராக - இதனை சுயாதீன வேட்பாளர், பொதுவேட்பாளர், தேசிய வேட்பாளர் என்று பல பெயர்களால் அழைக்கிறார்கள் - களம் இறங்கும் அறிவித்தல் யூலை நடுப்பகுதிக்குள் வருவது நிச்சயம் என்கிறார்கள் அவரது ஐக்கிய தேசிய கட்சியினர்.

அதற்கு முன்னர் இன்னும் எவர் எவரை தம்பக்கம் வீழ்த்தலாம் என்பதில் ரணிலின் உள்வீட்டுக்காரர்கள் இரவு பகலாக ஓய்வின்றி ஓடித்திரிகின்றனர். சஜித் அணியின் முக்கியஸ்தரான போர்க்கால ராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் நூல் வெளியீட்டில் ரணில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டதும், சரத்தை போர் வெற்றி நாயகன் என்று மகுடம் சூட்டியதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் நாடகத்தில் ஓரங்கம்.

ரணிலை ஆட்சிக் கதிரையில் அமர்த்தி தங்களையும் காப்பாற்றி வரும் பொதுஜன பெரமுன ஒரு வேட்பாளரை இத்தேர்தலில் நிறுத்தும் நிலையில் இல்லை. கப்பலில் இருந்து பாயும் எலிகள் போன்று ரணிலின் பக்கம் ஓடுபவர்களை, முக்கியமாக அமைச்சர் மற்றும் ராஜாங்க அமைச்சர்களை தடுக்க முடியாத நிலையில் பெரமுனவே முழுமையாக ரணில் பக்கம் சாய வேண்டிய சூழ்நிலைக்கு வந்துள்ளது.

இவ்வாறான பல்வகைத் தன்மையுடன் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும் வேளையில், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதை சிங்களம் பொறுக்க முடியாது சில்லறைக் குழப்படிகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதற்காக இரண்டு விடயங்களை இங்கு குறிப்பிட முடியும்.

• சிங்களத் தரப்பு மூன்றாகப் பிளவுபடாது ஒருமனதாக ஒருவர் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட வேண்டுமென்று சிங்கள பௌத்த பேராண்மையின் குரலாக இயங்கி வரும் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

• முன்னாள் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி, தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் அரசியல் கூட்டமைப்பில் இருப்பதாக டெய்லி மிரர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு அறிவிப்புகளும் இனவாதத்தைக் கக்கும் செயற்பாடுகளே. சிங்கள தரப்பிலிருந்து ஒரு பொதுவேட்பாளர் என்ற கரு ஏன் உருவாக வேண்டும்? 1982 ஜனாதிபதித் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக குமார் பொன்னம்பலம் போட்டியிட்டபோது உருவாகாத இவ்வாறான எதிர் மனப்பான்மை இப்போது ஏன் வர வேண்டும்?

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற சிந்தனை தமிழ் சிவில் செயற்பாட்டாளர்களிடமிருந்து வந்தது. இதனை எந்தத் தமிழ் அரசியல் கட்சியும் தமதாக்க முடியாது. தமிழ்த் தேசியம் என்ற கொள்கையிலான அனைத்துத் தமிழ் கட்சிகளும் இதனை ஏற்றுள்ளன. (இருவர் மட்டும் புறம்போக்காக உள்ளனர்) தமிழ்ப் பொது வேட்பாளரை ஏற்றுக் கொண்டதால் முன்னாள் விடுதலைப் புலி போராளிகளும் இதனை முழு மனதுடன் ஆதரிக்கின்றனர்.

1971 சேகுவேரா புரட்சியின்போதும், 1987 ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் போதும் ஆயிரமாயிரம் மக்களைக் கொன்று குவித்து நரவேட்டை நடத்திய ஜே.வி.பி.யின் வேட்பாளராக அநுர குமார திசநாயக்க போட்டியிடுவதை எவரும் இதுவரை விமர்சிக்கவில்லை. ஆனால், தமிழினத்தின் விடுதலைக்காக அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடி, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பிய முன்னாள் போராளிகளை எதற்காக பிரித்துப் பார்த்து விமர்சிக்க வேண்டும்?

சிங்கள தேசத்தின் அரசியல் கட்சிகள் அனைத்திலிருந்தும் உள்வாங்கப்படுபவர்களின் தேசிய - பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களம் இறங்குவதாகச் சொல்லப்படுகிறது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக அறிவித்துள்ளனர். இப்போதைக்கு இது போதுமானாலும், தாமதமின்றி தமிழ்ப் பொதுவேட்பாளரை பெயர் சூட்டி களத்தில் இறக்குவது அவசியமாகிறது. தமிழ் சிவில் அமைப்புகள் இவ்விடயத்தில் வேகம் காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்திற்கான கானக பாதயாத்திரை இன்று ஆரம்பம்!



குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்திற்கான 2024 ஆம் ஆண்டுக்கான கானக பாத யாத்திரை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகின்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் எதிர்வரும் யூலை மாதம் 6 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி யூலை மாதம் 22 ஆம் தேதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு இன்று 30 திகதி ஞாயிற்றுக்கிழமை உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்களின் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப் பாதை திறக்கப்படுகிறது.

இம்முறை காட்டுப் பாதை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனின் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைக்கவிருக்கிறார்.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாட்கள் பயணிப்பது வழமை.

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமணை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாட்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிகின்றனர்.



இப்புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்திற்கே நம்மை கூட்டி செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக் கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.





இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

விபுலமாமணி வித்தகர் வி.ரி. சகாதேவராஜா
(ஒருங்கிணைப்பாளர் - யாழ்.சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரைக்குழு)

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து 'சாமி" என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்.

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் உண்மை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் யாருக்கு வாக்களிக்கலாம்?

ச. வி. கிருபாகரன் - பிரான்ஸ்

'எப்போதும் நீங்களாக இருங்கள், உங்களை வெளிப்படுத்துங்கள், உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள், வெளியே சென்று வெற்றிகரமான ஆளுமையைத் தேடி அதை நகலெடுக்காதீர்கள்'. - தற்காப்புக் கலைஞர் புரூஸ் லீ.

இந்தக் கட்டுரை அரசியலைப் பற்றியது ஆனாலும், தற்காப்புக் கலைஞரான புரூஸ் லீயின் விடயங்களை மேற்கோள் கட்ட வேண்டிய அவசியங்கள் உண்டு. அரசியலைப் பொறுத்த வரையில், தற்பொழுது 'நம்பிக்கை' என்பது ஒரு சொற்பதமாக மட்டுமே காணப்படுகிறது. ஆனால் இலங்கைத்தீவில் நடைமுறையில் இது எந்தவித பெறுமதியற்று ஒதுக்கி முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் - சமூகம், பொருளாதார, கலாச்சாரம் மற்றும் சிவில் அரசியல் உரிமைகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். ஒரு அமெரிக்க படப் பகிர்வு மற்றும் சமூக ஊடகமான 'பின்றறஸ்ற்' (Pinterest) கூறியதாவது,

"நம்பிக்கையை இழக்க நிர்பந்திக்கப்பட்ட பின்னர், மன்னிப்பு கோருவதனால் என்ன பயன்" !.

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை தனது எழுபத்தாறாவது சுதந்திரத்தை கொண்டாடியது. ஆனால் பேரழிவுகளின் எண்ணிக்கையைப் பார்ப்போமானால் - ஆட்சிக்கவிழ்ப்பு, இரத்தக்களரியடங்கிய புரட்சிகள், உள்நாட்டுப் போர் அல்லது ஆயுத மோதல்கள், பாரீய கொலைகளையும் பொருளாதர அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை துயரமும் துன்பமும் நிறைந்த ஆயிரக்கணக்கான மக்களின் இடப்பெயர்வுகள். மேலும் பெருந்தொகையானோர் தடுப்பு காவலில் நீதிக்காக காத்திரு க்கின்றனர். அவை மட்டுமல்லாது, மக்கள் உணவு மற்றும் இதர அன்றாட தேவைகளின் மந்தநிலையும் காணப்பட்டது காணப்படுகிறது.

### அரசாங்கம் உணருமா?

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரக் கொண்டாட்டம், இலங்கையின் முன்னேற்றம் அல்லது வளர்ச்சியை காணக்கில் கொள்ளாது நடைபெறுகிறது. நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அரசாங்க மாற்றம், புதிய அரச தலைவர் புதிய அமைச்சரவை பதவி ஏற்கிறது. ஆனால் இந்த நாட்டின் வளர்ச்சி என்பது என்றும் மந்த நிலையிலேயே காணப்படுகிறது. தேயிலை, இறப்பர், கொக்கோ போன்றவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைத்த வருமானம் அன்றைய நிலையிலிருந்து எந்த முன்னேற்றமும் இல்லாது காணப்படுகிறது. 1970ன் பிற்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் வருமானம், புதிய வருவாயை இலங்கைதீவிற்கு கொண்டுவருகிறது. உண்மையை பேசுவதனால், இலங்கையில் வேறுபட்ட தொழில்களுக்கு ஆள் பற்றாக்குறை நிலவும் இவ்வேளையில், மக்கள் வெளிநாட்டில் உழைப்பதையும் வெளிநாடுகளில் வாழ்வதையுமே தமது நோக்க கொண்டுள்ளனர் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

சுதந்திரத்திற்கு முன்னர் எப்படியாக வடக்கு கிழக்கு வாழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தீர்வு காணமல் காணப்பட்டதோ, அதே நிலை இன்றும் தொடர்கிறது. வடக்கு கிழக்கில் மக்கள்தொகையில் மாறுதலை தவிர்ந்த எந்த மாற்றமோ முன்னேற்றமோ அறவே கிடையாது. தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை வியக்தக்குமளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

ஏழு தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கு வாழ் மக்ககளின் அரசியல் அபிலாஷைகளுக்கு எந்த தீர்வும் காணப்படாததற்கு யாரைக் குறை கூறுவது? உண்மையை கூறுவதனால், தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் ஆரம்பத்தில் சாத்வீக முறையில் குறைந்தது முப்பது வருடங்களாக நடைபெற்ற காலங்களில், இவ் போராட்டங்களை வன்முறை மூலம் அரசு கையாளப்பட்டதை தொடர்ந்து, ஆயுத போராட்டம் ஆரம்பமாகி, போரின் விளைவால், பெரும் தொகையான உயிரிழப்புகளும் பொருளாதார சேதங்களுடன் அடுத்த முப்பது வருடங்கள் நகர்ந்தன.

### கடந்த பதினைந்து வருடங்கள்

ஆனால் யுத்தம் முடிந்து கடந்த பதினைந்து வருடங்களாக, நிலைமை மிகவும் சூன்யமாகவும் மந்தமாகவும் நகர்கிறது. 2009 மே மாதம் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்காக கொடுக்கப்பட்ட வாக்குறுதியான - வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு 13ம் திருத்தம் சட்டம் அல்ல 13பிளஸ் என்று அன்று கூறிய அரசு, அவற்றை நிறைவேற்றியுள்ளதா? அதே அரசாங்கம், 2015 ஆம் ஆண்டு வரை, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்த பொழுதும், தமிழ் மக்களிற்கு அரசியல் தீர்வு என்ற கதைக்கு அங்கு இடமிருக்கவில்லை.

> எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற சிந்தனை நிலைப்பாடு நிட்சயம் வரவேற்கப்பட வேண்டியது. "எப்போதும் நீங்களாக இருங்கள், உங்களை வெளிப்படுத்துங்கள், உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள், வெற்றிகரமான ஆளுமையையும் நகலையும் தேடாதீர்கள்" என்ற தற்காப்புக் கலைஞர் புரூஸ் லீயின் தர்க்கம் எமது நிலைபாட்டிற்கும் சரியானது.

இலங்கைதீவில் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் சரித்திரத்தை ஆராய்பவார்கள் - தமிழ்த் தலைவர்களுக்கு, சிங்கள பௌத்த அரசியல் தலைவர்கள் எவ்வாறு போலியான வாக்குறுதிகளையும், கையெழுத்திட்ட ஒப்பந்தங்களையும் எவ்வளவு தூரம் மீறினார்கள் என்பது புரியும். இதிலும் விசேடமாக வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை அரசு தனக்கு சாதகமாக மாற்றியமைத்த சரித்திரங்களும் உண்டு.

ஒன்று அல்லது இரண்டு சந்தர்ப்பங்களில் இப்படியாக நடைபெற்றிருந்தால், அவற்றை தவறு அல்லது அறியாமை என்று கருதலாம். மே 2009க்குப் பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில், சிங்கள பௌத்த அரசுகளினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களும் வேலைபாடுகளும் சிறிலங்கா ஆட்சியாளரின் சிந்தனைகளை படம் பிடித்து காட்டின! ஆட்சியில் இருக்கும் எந்த ஒரு அரசாங்கமும், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை முன்வைக்கும் திட்டம் அறவே அற்றவர்கள். வடக்கு கிழக்கின் நில பிரதேசங்களை மாற்றி அமைப்பதுடன், சிங்கள குடியேற்றங்கள், பௌத்த மயமாக்கல் போன்ற திட்டங்கள், இன மோதலுக்கு தீர்வு காணுவதற்கானவை அல்ல.

### கொழும்பு வாழ் அரசியல்வாதிகள்

இதேவேளை வடக்கு கிழக்கில் உள்ள இளைய தலைமுறையை துன்புறுத்துவதன் மூலம், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அரசு மறைமுகமாக செயல்படுகிறது. யாவற்றையும் ஒட்டு மொத்தமாக பார்க்கும் பொழுது, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழர்கள், காலப் போக்கில் அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே சிறுபான்மை ஆக்கப்படுவதற்கான திட்டமே முன்னெடுக்கப்படுகிறது. இப்படியாக தமிழ்மக்கள், அவர்கள் பிரதேசங்களிலேயே சிறுபான்மை ஆகும் பொழுது, அங்கு யாரும் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு முன்வரமாட்டார்கள் என்பது சிங்கள பௌத்தத்தின் சிந்தனை.

ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறிய சித்தாத்தங்களிற்கு அமைய, நாற்பது வயதிற்கு குறைவான எந்த தமிழனும் அரசியல் தீர்வு பற்றி கவலைப்படுவதில்லையாம்! இது ரணிலின் வழமையான மிகைப்படுத்தல். வடக்கு கிழக்கில், பல்கலைக்கழக மாணவர்களும், மற்றைய இளைஞர்களும், தமிழ் மக்கள் தொடர்பான சகல விடயங்களில் முன்னணியில் உள்ளனர்.

ஒவ்வொரு முறையும் தேர்தலை எதிர்நோக்கும் வேளைகளில் - தமிழ் மக்களது அரசியல் தீர்வு பற்றி சிங்கள தலைவர்கள் தமிழரிடம் மட்டுமே பேசுவது வழமை. தென்னிலங்கையில் இத் தலைவர்கள் தமிழருக்கான அரசியல் தீர்வு பற்றி பேசுவது கிடையாது. அத்துடன் இவர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழருக்கான அரசியல் தீர்வு பற்றி குறிப்பிடுவதில்லை.

தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வை மோசடி செய்பவர்கள் வரிசையில் செல்லும் மிதவாத தமிழர்கள் அல்லது சந்தர்ப்பவாத தமிழர்கள் உள்ளனர். அந்த நபர்களை பகுப்பாய்வு செய்தால், அவர்கள் வடக்கு கிழக்கு வாழ் மக்களிடையே பிரபலம் அற்றவர்கள் என்பதுடன், இப்படியான பெயர்வழிகள் கொழும்பை தளமாக கொண்டு வாழ்பவர்கள்.

கொழும்பில் வாழும் பெரும்பலான தமிழ் அரசியல்வாதிகள், நஞ்சுத்தன்மையும் கொண்டவர்கள். மறைந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் சுயாட்சிக் கழகத்தின் ஸ்தாபகருமான திரு.வி.நவரத்தினம் எழுதிய, "தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்" என்ற நூலில், கொழும்பில் வாழும் பெரும்பலான தமிழ் அரசியல்வாதிகள், மக்கள் விருப்பு வேறுப்புகளை அலட்சியம் பண்ணுவதுடன், தமது சுயநலத்தில் கண்ணும் கருத்து கொண்டவர்கள் என கூறியுள்ளார்.

### வேட்பாளர்களின் பின்னணி

கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு - திரு சம்பந்தர் ஐயாவும், அவ்வாறே நடந்து கொள்ளுகிறார்கள். அதே பிரச்சனை, அதே சர்ச்சை, அதே நிலைப்பாட்டிற்கு கொழும்பு வாழ் முதிர்ச்சியற்ற ஓர் தமிழ் அரசியல்வாதியால், சம்பந்தர் ஐயா மிகவும் தவறாக வழி நடத்தப்படுகிறார்.

இதில் நகைப்புக்குரிய விடயம் என்னவெனில், கொழும்பில் வாழும் இரு தமிழ் அரசியல்வாதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர்.

தெற்கில் இருந்து ஜனதிபதி தேர்தலில் சாத்தியமான மூன்று வேட்பாளர்களின் பின்னணியை சுருக்கமாகப் பார்ப்பதானால் - ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல பிளவுகளை ஏற்படுத்தியதுடன், தானே தமிழர்களின் இன்றைய பலவீனமான நிலைக்கு, வித்திட்டவர்ரேன பல தென்னிலங்கை அரசியல் மேடைகளில் கூறிவருபவர்.

2006 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து வடக்கு கிழக்கைப் பிரித்தது ஜே.வி.பி. சஜித் பிரேமதாச போர்க் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட பெரும்பாலான இராணுவ அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்துவருபவர். இவர்களது எதிர்கால நடவடிக்கைகளை தமிழ்மக்கள் நம்புவது என்பது, "மீண்டும், வேதாளம் முருக்க மரத்தில் ஏறுவதற்கு" சமன்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற சிந்தனை நிலைப்பாடு நிட்சயம் வரவேற்கப்பட வேண்டியது. "எப்போதும் நீங்களாக இருங்கள், உங்களை வெளிப்படுத்துங்கள், உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள், வெற்றிகரமான ஆளுமையையும் நகலையும் தேடாதீர்கள்" என்ற தற்காப்புக் கலைஞர் புரூஸ் லீயின் தர்க்கம் எமது நிலைபாட்டிற்கும் சரியானது.

### இஸ்ரேல் - இலங்கை

இந்த வாரத்துடன் இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கி ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டது. இஸ்ரேல் ஏன் காசாவை அழிக்கிறது என்பதை இன்று வரை நமது அரசியல் ஆய்வாளர்களால் புரிந்து கொள்ள முடியாதது விந்தையானது. பாலஸ்தீனத்தின் பிரதேசத்தை காசா-மேற்குக் கரை என இரு பகுதிகளாகப் இஸ்ரேலியர்கள் பிரித்ததன் மூலம், தாங்கள் ஒரு வரலாற்றுத் தவறை செய்துவிட்டதை காலம் சென்று இஸ்ரேலியர்கள் உணர்ந்துள்ளனர்.

காரணம், உலகில் சர்வதேச செல்வாக்கு பாலஸ்தீனியர்களுக்கு அதிகரித்து வரும் தற்போதைய நிலையில், காசா மற்றும் மேற்குக் கரை ஆகியவை, இரண்டு பாலஸ்தீன நாடுகளை உருவாக்கக் கூடிய நிலை, காலப் போக்கில் ஏற்படலாம். உதாரணத்திற்கு, 'ஜனநாயக பாலஸ்தீனம்' மற்றையது 'பாலஸ்தீனிய குடியரசு' ஆக உருவாகலாம். இக் காரணிகளினால், இஸ்ரேலியர்கள் காசாவை எந்த விலை கொடுத்தும் அழிப்பதில் உறுதியாக உள்ளனர். காஸாவை இல்லாது ஒழித்த பின்னர், மேற்குக் கரையை மட்டும் பாலஸ்தீன நாடாக ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு எளிதாக இருக்கும் என்பது அவர்களின் எண்ணம்.

இதேபோல், இலங்கைதீவில் - வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் சர்வதேச செல்வாக்கு அதிகரித்து வரும் இன்றைய நிலையில், இங்கும் காலப்போக்கில் இதே நிலை உருவாகலாம். முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலி ஓயா என்ற பிரதேசத்தை செயற்கையாகவும் தன்னிச்கையாவும் உருவாக்கி, வடக்கு கிழக்கை இரண்டு பிரதேசங்களாக பிரித்து, சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள் நிறுவும் செயற்பாடு என்பது, எதிர்காலத்தில் எதிர்மாறான விளைவுகளை நிட்சயம் ஏற்படுத்தும்.

(முடிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நாதஸ்வரக் கலைஞரை நினைக்கும் தென்மராட்சி

## கலாநிதி எம். பஞ்சாபிகேசனுக்கு நூற்றாண்டு விழா

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் 2010 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்ட நாதஸ்வர வித்துவான் எம். பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா நாளை 01.07.2024 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகின்றது.**

புன்னகை தவழும் வதனம், பழைமை குன்றாத குடுமி, வெள்ளை வெளிர் என்று மிளிரும் பெரிய கரை பதித்த வேட்டி நெடிதுயர்ந்த தோற்றம் சுயஒழுக்கத்திலும் சபை ஒழுக்கத்திலும் உயர்குணாம்சங்கள் என இவையே கலாநிதி எம்.பஞ்சாபிகேசன் என்ற பெயரைச் சொன்னதும் எங்கள் நினைவுகளில் வரும் விடயங்களாகும்.

தென்மராட்சி சங்கத்தானையில் 01.07.1924 இல் பிறந்து தனது 91 ஆவது வயதில் 26.06.2015 இல் அமரத்துவம் அடைந்தவர் இவர். தந்தை சங்கத்தானை தவில் வித்துவான் முருகப்பாபிள்ளை தாய் மிருசுவில் சின்னப்பிள்ளை.

இளமைக்காலந்தொட்டே நாதஸ்வரக் கலைமீது ஈடுபாடு கொண்டு சாவகச்சேரியூர் சண்முகம்பிள்ளை அப்புலிங்கம்பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வரக் கலையைப் பயின்றார். ஒரு நாதஸ்வரம் ஒரு தவில் என்று வாசிக்கும் நிலைமையை மாற்றி இணைந்து நாதஸ்வரம் வாசிக்கும் முறைமையை ஏற்படுத்திய பெருமைக்குரியவர்களாக சண்முகம்பிள்ளை அப்புலிங்கம்பிள்ளையைக் குறிப்பிடுவர்.

பஞ்சாபிகேசனின் முதலாவது கச்சேரி அவரது 14 ஆவது வயதில் பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது. அன்று தொடக்கம் அவரது 85 ஆவது வயதில் பம்பலப்பிட்டியில் நிகழ்த்திய கச்சேரி வரை பல்லாயிரக்கணக்கான நாதஸ்வரக் கச்சேரிகளை நிகழ்த்திய பெருமை அவருக்குரியது.

பழைமை - மரபு பேணல் என்பவற்றில் பஞ்சாபிகேசன் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். இன்று காலத்திற்கு ஏற்றாற் போல் டிறம்ஸ் வாத்தியத்துடன் நாதஸ்வரம் இசைக்கும் நிலைமை வந்துவிட்டது. ஆனாலும் பஞ்சாபிகேசனைப் பொறுத்தவரை நாதஸ்வரத்துக்குரிய பக்கவாத்தியம் தவில் மட்டும் தான்.

1970களின் நடுப்பகுதியில் இலங்கையில் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்களிடையே திமிரி நாதஸ்வரத்தை வாசிப்பதா? பாரி நாதஸ்வரத்தை வாசிப்பதா என்ற வித்துவப் போட்டி ஏற்பட்டது. திமிரி என்பது மூன்று கட்டை சுருதி கொண்ட கட்டைக் குழல். பாரி என்பது இரண்டு கட்டை சுருதி கொண்ட நெட்டைக் குழல். பஞ்சாபிகேசன் பாரிக் குழல் தான் எமக்குரியது என்பதில் உறுதியாக இருந்தார். இன்று யாழ்ப்பாண வித்துவான்கள் அனைவரது கைகளிலும் பாரிக் குழலே காணப்படுகின்றது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பஞ்சாபி கச்சேரிக்காக வருகிறார் என்றால் அவருக்கென்று சில பாடல்களைத் தனித்துவமாக இரசிக்க இரசிகர்கள் ஆயத்தமாக இருப்பர். அவற்றுள் நகுமோ.. என்ற கீர்த்தனை சிங்காரவேலனே, அலைபாயுதே கண்ணா.. முதலிய பாடல்கள் நிச்சயம் இடம்பெறும். சாஸ்திரிய சங்கீதம் புரிகிறதோ இல்லையோ கிராமத்தின் அடிக்கோடியில் உள்ள ஓர் இரசிகனும் சாஸ்திரிய சங்கீதப் பாடலைத் தலையாட்டிக் கேட்கிற அளவுக்கு பஞ்சாபியின் வாசிப்புத் திறன் இருந்தது.

பஞ்சாபிகேசனுக்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தவில் இசைத்தவர் அவரது சகோதரர் கே. எம் நடராஜசுந்தரம் ஆவார். தெட்சணாமூர்த்தி என்ற எங்கள் மண்ணின் பிறவித் தவில் கலைஞர் 70 களின் ஆரம்பத்தில் தனக்கு நாதஸ்வரம் வாசிப்பதென்றால் பஞ்சாபி மட்டும்தான் வாசிக்கலாம் என்று நிபந்தனை விதித்திருந்தாராம். அந்த அளவுக்கு புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞனாக பஞ்சாபிகேசன் திகழ்ந்தார்.

அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் இன்று புகழ்பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்களாகத் திகழ்கின்றனர். பஞ்சாபிகேசனின் இசைத்திறனுக்கு மதிப்பளிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 2010 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு விழாவின் போது இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.




தென்மராட்சிக்கு இசைவளம் சார்ந்து புகழ் சேர்த்த பஞ்சாபிகேசனுக்கு 01.07.2024 இல் தென்மராட்சி மக்கள் நூற்றாண்டு விழாவை முன்னெடுத்தும் திருவுருவச்சிலை அமைத்தும் நாத அர்ப்பணங்கள் செய்தும் எம்பஞ்சாபிசேன் என நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியிட்டும் தமது நன்றியுணர்வை வெளிப்படுத்துகின்றனர். இது நயத்தக்க பண்பாடாகக் கொள்ளத்தக்கதாகும்.

**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**
(அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ். செந்தூரன்,**
**அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்ததோடு அங்கு சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார் என்றும், அப்போது அவர் குருந்தூர்மலை, வெடுக்குநாறி என்பவற்றில் அனைத்து மதத்தவரும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழிசெய்யப்படும் என்றும் கூறினாராமே?.

**வியுக்தியார்:** குருந்தூர்மலையில் விகாரை கட்ட நீதிமன்றம் தடை விதித்துள்ளபோதிலும் விகாரை கட்டி முடிக்கப்பட்டுவிட்டதல்லவா. இனி அவர்கள் அந்த விகாரையில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டுமே. அதுதான் அவர், அனைத்து மதத்தினரும் பாரபட்சமின்றி வழிபட அனுமதிக்கப்படுவார்கள் என்கிறார் போலும். அதுசரி இவர் சொன்னால் நமது சிவாலயங்களுக்கு சென்று வழிபடுவதைத் தடுப்பதற்காக சரத் வீரசேகராவோ, கம்பன்பிலவோ தமது 'படையுடன்" வந்து தடுக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் தருவாராம்?

**தி. வினோத்,**
**இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதே. அத்துடன், இன்னும் 100 நாட்களில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கும் எனவும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** இவர் ரணிலுடன் இருக்கும் வரை, அதாவது ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளராக இருக்கும்வரை, ரணில் எந்தத் தேர்தலிலும் வெற்றிபெறமுடியவில்லை. மைத்திரியை வேட்பாளராக்கி ஐதேக போட்டியிட்டபோது இவர் மகிந்த பக்கம் தாவினார். மகிந்த தோல்வியடைய ஐதேக ஆதரவு வேட்பாளர் மைத்திரி வெற்றிபெற்றார். கடந்த தேர்தலில் மகிந்த தரப்பு வேட்பாளர் கோட்டா வெற்றிபெற்றபோது, அவர் மகிந்த தரப்பிலிருந்து கட்சி தாவி சஜித்துடன் இணைந்திருந்தார். அதுதான், 100 நாட்களில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்ய மக்களுக்கு சந்தர்ப்பம் என்கிறாரே தவிர சஜித் ஜனாதிபதியாகுவார் என்று துணிந்து சொல்ல தயக்கம் காட்டுகிறார்போலும்.சி.

**க. ராம்குமார்,**
**ஸ்ரேசன் றோட், வவுனியா.**

**கேள்வி:** நாங்கள் நிச்சயமாக அரசாங்கத்தை அமைப்போம் என்று முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தான் தான் தலைவர் என்று கூறும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவால் கட்சித் தலைவராகக் கூட முடியவில்லை. ஆனாலும் அவர், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக களம் இறங்கி, ஜனாதிபதியாகுவேன் என்று சொல்கின்றபோது, மகிந்த ராஜபக்ச அடுத்து ஆட்சி அமைப்பேன் என்று சொல்வது தவறாகத் தெரியவில்லையே.

**த. பிரதீபன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தன்னை வெளியில் அழைத்து வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். இதன் காரணமாகத்தான் யுத்தம் முடிவடைந்தது என்று கருணா அம்மான் என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளாரே?. என்ன திடீரென்று பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்துகிறார் கருணா அம்மான்?

**வியுக்தியார்:** அண்மையில் மட்டக்களப்பு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரையும் சந்தித்திருந்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன. கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு அம்பாறையில் இருபத்தி எண்ணாயிரம் வாக்குகளைப் பெற்ற அவர், தன்னிடமும் வாக்குகள் இருக்கின்றன என்று ரணிலுக்கு ஞாபகப்படுத்தி 'டீல்" போட முயற்சி செய்கிறார் என்பது மட்டும் தெரிகின்றது. அது மாத்திரமல்ல, புலிகள் இயக்கத்தை யுத்தத்தில் வென்றவர்கள் தாங்கள்தான் என்று ராஜபக்சக்கள் கூறிக்கொண்டிருக்க, இல்லை இல்லை என்னை புலிகள் இயக்கத்திலிருந்து பிரித்து எடுத்ததால் தான் புலிகளை அவர்களால் வெற்றிகொள்ள முடிந்தது என்றும், அந்த வெற்றிக்கு- தனது பிரிப்புக்கு காரணமான ரணில் விக்கிரமசிங்கதான் முழுக்க முழுக்க காரணம் என்றும் இவருக்கு 'சேட்டிப்பிக்கேற்" கொடுக்கிறார் கருணா அம்மான். அதன் நோக்கம் என்ன என்பது நமக்கு எல்லாம் புரிந்ததுதானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் இராணுவ கூட்டமைப்பு உடைகிறதா ?

# ஆர்மேனியா - சிஷ்டோ கூட்டணியால் விலகல்:

# புட்டினுக்கு தொடரும் பெரும் சவால்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆர்மேனியாவின் பிரதமர் நிகோல் பஷினியன் ரஷ்ய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பிலிருந்து - CSTO- (Collective Security Treaty Organization) தனது நாட்டை வெளியேற்றுவதாகக் கூறியுள்ளார்.

நேட்டோவுக்கு போட்டியாக ரஷ்யா, ஆர்மீனியா, கஜகஸ்தான், பெலாரஸ், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளைக் கொண்ட கூட்டணியை புட்டின் நிறுவினார். இதனை ஒரு பன்னாட்டு அமைப்பாக வழிநடத்தி அதிகாரத்தை முன்வைக்க அவர் விரும்பினார்.

ஆயினும் குறிப்பிடத்தக்க இராணுவ வளங்கள் அல்லது பெரிய பொருளாதாரங்களைக் இந்த சிஷ்டோ அமைப்பு கொண்டிருக்கவில்லை.





மத்திய ஆசியாவில் பதட்டங்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வேளையில் நேட்டோவிற்கு பதில் என்று பரவலாகக் கருதப்படும் கூட்டுப் பாதுகாப்பு உடன்படிக்கை அமைப்பில் இருந்து வெளியேறுவதாக ஒரு முக்கிய ரஷ்ய கூட்டாளி நாடான ஆர்மேனியா கூறியுள்ளமை மாஸ்கோவை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

ரஷ்யா பல விடயங்களில் பலமுறை ஆர்மேனியாவை புறக்கணித்ததாகவும், தற்போது மாஸ்கோ தலைமையிலான சிஷ்டோ கூட்டணியில் இருந்து தனது நாட்டை வெளியேற்றுவதாக பிரதமர் நிகோல் பஷின்யான், நாடாளுமன்றத்தில் தெரிவித்ததார்.

இந்த விலகும் நடவடிக்கையை எப்போது செய்வது என்பதை அவரது அரசாங்கம் பின்னர் முடிவு செய்யும் என்று பஷினியன் கூறினார்.

**உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு:**

பிப்ரவரி 2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியதிலிருந்து இந்த பாதுகாப்பு கூட்டாளிகளிடையே பதட்டங்கள் அதிகரித்தன.

குறிப்பாக உக்ரைனில் புட்டினின் முழு அளவிலான படையெடுப்பிற்குப் பிறகு ரஷ்யாவிற்கும் ஆர்மீனியாவிற்கும் இடையே பதட்டங்கள் அதிகரித்தன. ரஷ்யாவின் படையெடுப்பை ஆர்மேனியா பல சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்க மறுத்துவிட்டது.

ஆர்மேனியாவின் சமீபத்திய அறிவிப்பு புட்டினுக்கு பெரும் அடியாக இருக்கலாம் என கருதப்படுகிறது. "நாங்கள் வெளியேறுவோம், எப்போது வெளியேறுவது என்பதை நாங்கள் முடிவு செய்வோம், நாங்கள் திரும்பி வர மாட்டோம், வேறு வழியில்லை" என ஆர்மேனியா பிரதமர் அந்நாட்டு சட்டமியற்றுபவர்களிடம் கூறியுள்ளார்.

இதனைப்பற்றி கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், "எங்கள் ஆர்மீனிய நண்பர்களுடன் தொடர்ந்து பணியாற்றும்" என்று கூறியதாக அரசு கட்டுப்பாட்டில் உள்ள ரஷ்ய செய்தி நிறுவனமான TASS தெரிவித்துள்ளது. அத்துடன் மாஸ்கோ இறுதியில் வலுவான பதிலைக் கொடுக்கும், ரஷ்யாவை எதிர்த்து நிற்கும் துணிச்சலின் தீமைகளைக் காட்டுவதற்கு பின்விளைவுகள் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை, என்றும் மாஸ்கோ இறுதியில் வலுவான பதிலைக் கொடுக்கும் என்று கூறினார்.

அதேவேளை ரஷ்யாவின் மீது படையெடுக்கும் திட்டத்தில், ஐரோப்பாவிற்குள் அமெரிக்க துருப்புக்களை குவிக்க நேட்டோ திட்டமிட்டு வருகிறது என்றும் கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

ஜூன் 2023 இல் ஆர்மேனிய நாடு உக்ரைனுடனான போரில் ரஷ்யாவின் கூட்டாளி அல்ல என்றும், அது ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் சிக்கியிருப்பதாக உணர்ந்ததாகவும் ஆர்மேனிய பிரதமர் நிகோல் பஷினியன் மேலும் கூறியுள்ளார்.

உக்ரைன படையெடுப்பிற்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் மற்றய உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுவிழந்துள்ளன.

நேட்டோவிற்கு பதிலாகக் கருதப்படும், முன்னைய சோவியத் நாடுகளின் இராணுவக்கூட்டணி அமைப்பிலிருந்து ஆர்மேனியா அரசு கிரெம்ளின் ஆதரவில் இருந்து விலகுவதாகக் கூறியுள்ளது.

நீண்ட காலமாக அஜர்பைஜானில் இருந்து பிரிந்த பிராந்தியமான நாகோர்க்னோ-கராபாக் ஆர்மேனியர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. கடந்த ஆண்டு அஜர்பைஜான் இப்பிராந்தியத்தை தாக்கியபோது ரஷ்ய அமைதி காக்கும் துருப்புக்கள் ஆர்மேனியாவுக்கு உதவிக்கு வராததால் பிரதமர் பாஷினியன் பெரும் கோபமடைந்தார்.

அஜர்பைஜான் - ஆர்மேனிய மோதலில் ஆர்மீனியாவிற்கு எதிராக குறிப்பிடப்படாத சிஷ்டோ நாடுகள் சதி செய்ததாக பாஷினியன் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமர் பாஷினியன் மீண்டும் இந்தப் பிரச்சினையை எழுப்பி, சிஷ்டோ நாடுகள் ஒப்பந்தத்தின் கீழ் அதன் உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர் மற்றும் அஜர்பைஜானுடன் சேர்ந்து எங்களுக்கு எதிரான போரைத் திட்டமிட்டு நடத்தினர என்றும் கூறியுள்ளார்.

**ரஷ்ய அமைதி காக்கும் படை விலகல்:**

ரஷ்ய அமைதி காக்கும் படையினர் அஜர்பைஜானின் நாகோர்க்னோ-கராபாக் பகுதியில் இருந்து வெளியேறுவார்கள் என்று கிரெம்ளின் அரசு கடந்த மாதம் ஏப்ரல் 15இல் தெரிவித்துள்ளது.

ரஷ்ய அமைதி காக்கும் படையினர்



இருந்தபோதிலும், பிரிந்து சென்ற நாகோர்னோ-கரபாக் பகுதியை அஜர்பைஜான் கடந்த செப்டம்பரில் மீண்டும் கைப்பற்றியது.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக, அஜர்பைஜானின் ஒரு பகுதியாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நாகோர்னோ-கராபாக், ஆர்மேனிய சார்பு பிரிவினைவாதிகளால் கட்டுப்படுத்தப்பட்டது. அங்கே பெரும்பான்மையான ஆர்மீனிய மக்களைக் கொண்டிருந்தது.

எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில், அஜர்பைஜான் படைகள் இரத்தக் களரி படிந்த ஆறு வார தாக்குதலின் பின்னர் நகோர்னோ-கராபாக் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை கைப்பற்றியது.

இருதரப்புக்கும் இடையே மாஸ்கோ போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ரஷ்யா 2,000 பேர் கொண்ட அமைதி காக்கும் படையை அப்பகுதியில் நிறுத்தியது. ஆயினும் கடந்த செப்டம்பர் 2023 இல், ரஷ்ய அமைதி காக்கும் படையினரால் தடுக்க முடியாத மின்னல் வேக ஒரு நாள் தாக்குதலில், நாகோர்னோ-கராபக்கை அஜர்பைஜான் இராணுவம் ஆக்கிரமித்து கையகப்படுத்தியது.

இந்த மோதலின் விளைவால் ரஷ்யாவிற்கும் ஆர்மேனியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியது. இதன் பின்னரும் மாஸ்கோ அரசு அஜர்பைஜானுடன் நல் உறவைப் பேணி வருகிறது.

**அஜர்பைஜான் ஆக்கிரமிப்பு :**

அஜர்பைஜான் ஆக்கிரமிப்பினை தடுக்க ரஷ்யா தனது நாட்டிற்கு ஆதரவாக தலையிடவில்லை என்று ஆர்மேனிய பிரதமர் நிகோல் பஷினியன் பல முறை விமர்சித்தார். இதன் விளைவே மாஸ்கோ தலைமையிலான கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் பாதுகாப்புக் கூட்டணியில் பங்கேற்பதை ஆர்மேனியா நடைமுறையில் நிறுத்தி விட்டதாக அவர் சமீபத்தில் கூறினார்.

**அமெரிக்காவுடன் நல்லுறவை பேண ஆர்மேனியா முயற்சி:**

இதற்கிடையில் ஆர்மேனியாவும் அஜர்பைஜானும் பரந்த சமாதான உடன்படிக்கைக்கு தரகர் முயற்சியில் அமெரிக்கா முயற்சி செய்கின்றது.

ஆர்மேனியா அரசு அமெரிக்கா, ஐரோப்பா உட்பட மேற்கு நாடுகளுடன் நல்ல உறவை பேணவும் தற்போது முற்பட்டுள்ளது.

இவ்வருட பெப்ரவரியில் ஆர்மேனியா அதன் சிஷ்டோ அங்கத்துவத்தை முடக்கியது. ஆனால் இதுவரை அதன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவில்லை. ஜூன் மாதம், சிஷ்டோ உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில், ஆர்மேனியா அதன் உறுப்பினர் நிலையை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆயினும் ஆர்மேனிய வெளியுறவு மந்திரி சிஷ்டோ பொதுச் செயலாளருடன் சிறந்த உறவுகளை கொண்டிருப்பதாக மட்டுமே கூறினார்.

எது எவ்வாறாக இருப்பினும் ஆர்மேனியா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பிலிருந்து தனது நாட்டை வெளியேற்றும் சமீபத்திய அறிவிப்பு புட்டினுக்கு பலத்த சவாலாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 18 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல்



கொழும்பு, ஜூன் 30

**சரக்கு விமான சேவைகள் மூலமாக நாட்டுக்கு அனுப்பப்பட்ட 18 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கைன் மற்றும் குஷ் ஆகிய போதைப்பொருட்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த போதைப்பொருட்கள் தயிரில் இருந்து எடுக்கப்பட்ட புரதங்களின் பவுடர் என கூறி அனுப்பப்பட்டுள்ளன.**

சீதுவையில் உள்ள வெளிநாடுகளுக்கு பொதிகள் அனுப்பும் சேவை நிறுவனம் ஒன்றிலிருந்து இந்தப் போதைப்பொருட்களை சுங்கத் திணைக்கள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவற்றில், 2 கிலோ கிராம் 30 கிராம் கொக்கைன் மற்றும் 2 கிலோ கிராம் 177 கிராம் கஞ்சா வகை குஷ் போதைப்பொருட்கள் இருந்ததாக சுங்க ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் மொத்த பெறுமதி 18 கோடியே 56 இலட்சத்து 40,000 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள் பொதிகள் கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கடவத்தை மற்றும் கொழும்பு ஆகிய இரண்டு முகவரிகளுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அந்த முகவரிகள் போலியானவை என உறுதிப்படுத்தப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக இந்தப் போதைப்பொருட்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(எ)



# பாதயாத்திரிகர்கள் உகந்தைமலை முருகன் ஆலயத்தை அடைந்தனர்

உகந்தை, ஜூன் 30

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்ட குழுவினர் உகந்தைமலை முருகன் ஆலயத்தை சென்றடைந்தனர்.

(எ)

# 3, 700 போதை மாத்திரைகளுடன் இளைஞன் பொலிஸாரால் கைது

குருநாகல், ஜூன் 30

குருநாகல் பிரதேசத்தில் மஹவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 3, 700 போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குருநாகல், அம்பன்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ)



# 300 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து லொறி விபத்து

## ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் காயம்

கண்டி, ஜூன் 30

கண்டி, பதியபெலெல்ல, மந்தாரம்நுவர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கோழி கழிவுகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வீதியின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 300 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, லொறியின் சாரதியும் சாரதியின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# திருகோணமலையில் இஸ்ரேல் பெண் மாயம்

திருகோணமலை, ஜூன் 30

இலங்கைக்கு வருகை தந்த இஸ்ரேலயிய பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் திருகோணமலையில் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாட்டுக்கு அமைய திருகோணமலை உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த 25 வயதுடைய டேமர் எமிடாய் என்ற இஸ்ரேலிய பெண் சுற்றுலாப் பயணியே திருகோணமலைக்கு சென்றிருந்த நிலையில் காணாமல் போயுள்ளார்.




அவர் இணையவழி ஊடாக திருகோணமலையிலுள்ள ஹோட்டலில் அறை ஒன்றை முன்பதிவு செய்து, 22ஆம் திகதி அங்கு சென்று தங்கியுள்ளார்.

இந்த நிலையில், அவர் 26 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். இதனையடுத்து, ஹோட்டலின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

காணாமல் போன சுற்றுலாப் பயணி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை எனவும் உப்புவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த சுற்றுலாப் பயணி தொடர்பில் தகவல் அறிந்தோர் +972508899698 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு அல்லது sar@magnus.co.il மின்னஞ்சல் முகவரிக்கு அறிவிக்க முடியுமென மேக்னஸ் என்ற சர்வதேச தேடல் மற்றும் மீட்பு அமைப்பு சமூக ஊடகங்களில் பதிவொன்றை பகிர்ந்து வேண்டுகோள் விடுத்துள்ளது.

(எ)

# பாலிதவின் மகன் கைது!

கொழும்பு, ஜூன் 30

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டார வாகன விபத்து ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4. 30 மணியளவில் கருவலகஸ்வெவ, அலிமங்கட பிரதேசத்தில் அவர் பயணித்த கார் வீதியை விட்டு விலகி ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்து புத்தளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# கதிர்காமம் பாதயாத்திரைக்கு காட்டுப்பாதை இன்று திறப்பு

உகந்தை, ஜூன் 30

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை இன்று ஞாயிற்றுக்கிழமை மரபு ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பூநாடா வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோகபூர்வமாக திறந்துவைப்பார்.

வரலாறு காணாத வகையில் இம்முறை சுமார் 5000 இற்கும் மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்து சமய கலாசார முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலைப் பத்து பாடி கானகப் பாதைக் கதவு திறந்து வைக்கப்படவுள்ளது.

அதிகாலை 5. 30 மணிக்கு உகந்தைமலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவ சிறீ க. கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடத்தி ஆசியுரை வழங்கியதையடுத்து காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாகத் திறக்கப்படும்.

அதன் பின்னர் அடியார்கள் கானக பாதயாத்திரையை மேற்கோள்வார்கள்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி. ஜெயராசா( ஜெயா வேல்சாமி) தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் அடியார்கள் தற்போது உகந்தைமலை முருகன் ஆலயத்தில் தங்கியுள்ளனர்.

கதிர்காமம் காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும். உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை. பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப் பாதை 56 மைல்களை உள்ளடக்கியது.

சுமார் 6 நாட்கள் இந்தக் காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

இன்று 30 ஆம் திகதி திறக்கப்படவுள்ள காட்டுப் பாதை ஜூலை 11 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காமம் முருகன் ஆலய கொடியேற்றம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஜூலை மாதம் 22ஆம் திகதி தீர்த்தம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு...

விக்கிரமசிங்க களமிறங்க ஆதரவு வழங்குமாறு பஸில் ராஜபக்ஷவுக்கு அந்நாடு அழுத்தம் கொடுத்து வருகின்றது. டில்லியால் என்ன கூறப்பட்டாலும் அவற்றை கேட்பார், ஆனால் பொருத்தமான நேரத்தில் உரிய வகையிலேயே பஸில் முடிவுகளை எடுப்பார்.

பொதுஜன பெரமுனவின் ஆதரவை பெறுவதற்கு இருந்த இறுதி வாய்ப்பையும் ரணில் விக்கிரமசிங்க தவறவிட்டு விட்டார். ராஜபக்சக்களின் பொறுமை எல்லை தாண்டிவிட்டது. ரணிலை ஆதரித்தால் கட்சியைவிட்டு வெளியேறி, புதிய கட்சியை ஆரம்பிப்பேன் என நாமல் ராஜபக்ச கூட கூறிவிட்டார். எனவே, ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி வேட்பாளர் களமிறங்குவது உறுதி. அந்த வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பதும் உறுதி.

சிலர் ராஜபக்சக்கள் வேண்டாம் என்கின்றனர். முதுகெலும்பிருந்தால் - முடிந்தால் ரணில் விக்கிரமசிங்க யானைச் சின்னத்தில் வந்து போட்டியிட்டு காட்டட்டும் - என்றார். (அ)

## தமிழ்...

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

கடந்த 2005ஆம் ஆண்டு ஒரு தலைமைத்து வத்துக்கு கீழ் செயற்பட்டு அன்று உலகத்துக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது.

சில நாடுகள் அந்தச் செய்தியை ஜனநாயகத்தைப் பயன்படுத்த தவறியதாகவும் குற் றம் சுமத்துகின்றன.

யுத்தம் முடிந்தவுடன் பொன்சேகாவுக்கு ஆதரவு அளித்து அவர் தோல்வி அடைந்தார். அதற்கு பிறகு எங்களுக்காக அவர் எதனையும் இதுவரை கதைக்கவில்லை.

மைத்திரி, மகிந்த தேர்தலில் போட்டியிட்டபோது இரண்டும் எதிரி, அதில் யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானித்து மைத்திரிக்கு ஆதரவளித்தோம். அதிலும் தோற்றோம். அடுத்து சஜித்துக்கு ஆதரவு அளித்தோம். அங்கும் இராஜதந்திரம் தோல்விய டைந்தது.

நாட்டில் அரகலய போராட்டத்தைத் தொடர்ந்து டலஸ், ரணில் போட்டியிட்டபோது டலஸுக்கு ஆதரவு அளித்தோம். அங்கும் தோல்வியடைந்தோம். மக்களிடத்தில் அபிவிருத்தி தேவையுள்ளது. மேடையில் அதைப் பற்றி நாங்கள் கதைக்கவில்லை. உரிமைக்காகவே மக்கள் என்றும் வாக்களிக்கின்றனர்.

15 வருட வரலாற்றில் அநுர, சஜித், ரணில் பேசிய வரலாறு இல்லை. ஆனால் இப்பொழுது பேசுகிறார்கள். அவர்களுக்கு தேவை ஏற்பட்டுள்ளது.

தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் நாங்கள் ஏன் பொது வேட்பாளரை இறக்கக்கூடாது.13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜெய்சங்கருடன் கதைத்தோம். இந்திய வெளிவிவகார அமைச்சருடன் சந்தித்த சஜித் 13 ஐ தருவதாகக் கூறினார் என சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

பொது வேட்பாளரை களமிறக்கும் போது வேட்பாளர்கள் இறங்கி வருவார்கள். 13 ஐ விட மேலதிகமாக ஒன்றைத் தருகின்றோம் என்று சொன் னால் அதைப்பற்றி யோசிப்போம். ஏற்கனவே உள்ள 13 ஐ தருவோம் என்று சொல்கிறார்கள்.

34 வருடமாக பொலிஸ் அதிகாரம் இல்லை, காணி அதிகாரம் இல்லை. மத்திய அரசாங்கம் காணிகளை பிடிக்கிறது.

சிவாஜிலிங்கம் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியபோது அவரை ஒருவரும் கணக்கில் எடுக்க வில்லை.

எனவே, வரலாறு தந்திருக்கிற சந்தர்ப்பத்தை தவறாது இறுக்கி பிடித்து இந்த மண்ணில் நாம் யார் என்பதைக் காட்டலாம் - என்றார். (அ)

## காலி...

ஆவார்.

இந்த நிலையில் சிறையிலிருந்த சக ஊழியர் களால் தாக்கப்பட்ட இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## தம்மிக்கவை...

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினால் அது கட்சியின் எதிர்காலத்துக்கு ஆபத்தாக அமை யக்கூடும் என்பதாலேயே மொட்டுச் சின்னத்தில் வேட்பாளர் ஒருவரை களமிறக்க கட்சிக்குள் ஆதரவு வலுத்துள்ளது.

அத்துடன், மொட்டு கட்சியின் இந்த முடிவால் அக்கட்சி பிளவை சந்திக்கவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (அ)

## வெளிநாட்டு...

அலுவல்கள் பற்றிய குழுவிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜூலை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், பி.ப 5.00 மணிவரை விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி அன்றையதினம் விசேட உரையொன்றை நிகழ்த்தவிருப்பதாகவும் பிரதிச் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜூலை 3ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இரண்டாவது நாளாகவும் விவாதத்தை நடத்த இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணிக்கு தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவும் கடந்த 2024.06.26ஆம் திகதி கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை, இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி ஆகியவற்றுக்கிடையில் 2024.06.26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை, நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படுகின்றது. (அ)

## கடலில்...

மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் புறப்பட்ட “டெவோன்” என்ற பலநாள் மீன் பிடிக் கப்பலில் இருந்த 06 மீனவர்களே இச்சம்பவத்திற்கு முகங் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு கடலில் மிதந்த போத்தல்களை கண்டு மதுபானம் என நினைத்து பருகியுள்ளனர்.

குறித்த 06 மீனவர்களும் அதனால் பாதிக்கப்பட்ட நிலையில் , இது தொடர்பில் செய்தி அனுப்பும் இயந்திரங்கள் ஊடாக அறிவித்துள்ளதாக கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த சுசந்த கஹவத்த-

தங்காலை மீன்பிடி துறைமுகத்திற்கு பணி நிமித்தம் சென்ற ஆறு மீனவர்கள் கடலில் சில போத்தல்கள் மிதப்பதை அடையாளம் கண்டுள்ளனர்.

மதுபானம் என நம்பி, அந்த போத்தல்களில் இருந்த திரவத்தை பருகியுள்ளனர் . இதனால் 06 பணியாளர்களும் சுகவீனமடைந்துள்ளனர்.

செய்தி கிடைத்ததன் பின்னர், கப்பல் இருக்கும் இடம் கண்காணிக்கப்பட்டது.

இதுவரை நான்கு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர் - என்றார். (அ)

## சிவில் - கட்சி...

நேற்று வவுனியா விருந்தினர் விடுதியில் முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 4:00 மணி வரையிலும் இடம் பெற்றது. இச்சந்தில் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகளும், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

சந்திப்பின் முடிவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக, கட்சிகளும் மக்கள் அமைப்பும் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையானது எதிர்வரும் ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாக கையெழுத்திடப்படும். இவ்வாறு மக்கள் அமைப்பும் கட்சிகளும் சம அளவு பிரதிநிதித்துவம் வகிக்கும் பொதுக் கட்டமைப்பானது, இன்றிலிருந்து தமிழ்த் தேசியப் பேரவை என்று அழைக்கப்படும்.

தமிழ்த் தேசியப் பேரவையானது ஜனாதிபதித் தேர்தலை நோக்கிப் பல உப கட்டமைப்புகளை உருவாக்கும். உப கட்டமைப்புக்கள் எல்லாவற்றிலும் கட்சிகளும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் சம அளவில் உள்வாங்கப்படுவார்கள். இக்கட்டமைப்புகளில் ஒன்று யார் பொது வேட்பாளர் என்பதை தீர்மானிக்கும். மற்றொன்று, பொது வேட்பாளருக்கு உரிய தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும். மற்றொன்று, நிதி நடவடிக்கைகளை முகாமை செய்யும். இவ்வாறு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன் நிறுத்தும் வேலைகளை தமிழ்த் தேசிய பேரவையானது முன்னெடுக்கும்.

மேற்படி சந்திப்பில் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் கலந்து கொண்டன. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஐந்து கட்சிகளும் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கமும் என்று மொத்தம் ஏழு கட்சிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றன. (அ)

## கச்சதீவு...

இந்தியாவுக்கு இடையில் விரிவான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக ஹிந்து செய்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறாயினும், ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை என இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், அவ்வாறான பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார். (அ)

## எமது அரசியல் உரிமைகளை...

என என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாம் பெறுகின்ற இந்த அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியாக உரிமைகளையும், அவற்றை பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென் மேலும் செழுமை படுத்த அவசியமான அபிவிருத்தி, வளர்ச்சி திட்டங்கள், தொழில்நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவ பகிர்வு ஆகிய உதவிகளையே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கின்றோம். எமது இந்த நிலைப்பாடு, எமக்கு மட்டும் சாதகமானது அல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்துக்கும் “தொல்லை இல்லாமல்” சாதகமானது என நான் மிக தெளிவாக அமெரிக்க தூதர் ஜூலி சாங்கிடம் தெரிவித்தேன். அதையே இலங்கைக்கான ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயிடமும் கூறினேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில தினங்களாக சர்வதேச சமூக பிரதிநிதிகளுடன் நடத்தி வரும் சந்திப்புகள் பற்றி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்-

உலகம் இன்று மிக வேகமாக மாறி வருகிறது. உலக ஒழுங்கமைப்பு என்பது பலம் வாய்ந்த நாடுகளின் தேசிய நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க படுகிறது. எமது மக்களின் அரசியல் துன்பங்கள், துயரங்கள் பெரிய நாடுகளுக்கு பொருட்டாக தெரிவதில்லை. இலங்கை உட்பட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் தொடர்பாக உலக ஒழுங்கமைப்பு பலம் வாய்ந்த நாடுகளால் தமது நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க படுகின்றன.

இந்நிலையில் நாம் உலக நாடுகளை அணுகி எமது அரசியல் போராட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது நேரத்தை வீணடிக்கும் செயற்பாடாகும். இந்நாட்டு பிரதிநிதிகளும் இவற்றை பொறுமையாக கேட்கின்றார்களே தவிர எமக்காக அரசியல் போராட்டங்களை அவர்கள் முன்னெடுப்பது கிடையாது. உலக ஒழுங்கமைப்பு மிக வேகமாக இந்த நிலைலையை நோக்கி நகர்ந்து மாறி விட்டது.

ஆகவே, சர்வதேச சமூகத்திடம் எமது அரசியல் உரிமைகளை பெற்று தரும் பொறுப்பை நாம் ஒப்படைக்க போவதில்லை. ஆனால், அவர்கள் செய்ய கூடிய எம்மை நோக்கிய அவர்களின் பொறுப்புகள் சில உள்ளன. நாம் உள்நாட்டில் பெறுகின்ற அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியாக உரிமைகளையும், அவற்றை பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென் மேலும் செழுமை படுத்தும், அபிவிருத்தி, வளர்ச்சித் திட்டங்கள், தொழில் நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவ பகிர்வு ஆகிய உதவிகளையே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கின்றோம். அவற்றை எப்படி பெற வேண்டும் என்பது எனக்கு தெரியும்.

எமக்கான அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான உரிமைகளை பெறுவது, அரசியல் அமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது, ஆகியவற்றை மக்கள் ஆணையுடனான எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங்களை முன்னெடுத்து பெற்று கொள்வோம். இதுவே எமக்கு சாத்தியமான கொள்கை ஆகும். அதற்கு உரிய அரசியல் பலத்தை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எமது மக்கள் வழங்கி உள்ளார்கள். எதிர்காலத்தில் மிக அதிகமாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கூட்டணியின் தலைவர் என்ற முறையில் நான் ஒரு தூர பார்வையுடனேயே இதை கூறுகிறேன். எவ்வளவு அதிக வாக்குகள் எமக்கு கிடைகின்றனவோ, அந்த அளவு எமது பலம் உயரும். எமது பலம், எந்த அளவு உயர்கின்றதோ, அந்த அளவு எமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங்களையும் ஜனநாயக போராடங்களையும் முன்னெடுத்து நாம் உரிமைகளை பெறுவோம்.

நாற்பது வருடங்களாக மலைநாட்டில், தென் இலங்கையில் குப்பை கொட்டிய பிற்போக்கு கும்பலை விட பல மடங்கு பணிகளை நாம் 2015-2019 வரையான நான்கே வருடங்களில் செய்து காட்டி உள்ளோம். எதிர்காலத்தில் மிக விரைவாக இன்னமும் பல காரியங்களை நாம் செய்ய உள்ளோம். மக்கள் பலமே எமக்கு வேண்டும். எம்மை எதிர்க்கும் உதிரிகளை தேர்தல்களில் தூக்கி வீசி, எமது பலத்தையும், ஆட்சியையும் நாம் நிலை நாட்டுவோம். - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரணில் - பொதுஜன பெரமுன இடையில் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூன் 30

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.**

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன பெரமுனவும் இணைந்து பரந்தப்பட்ட கூட்டணி யொன்றை அமைக்கும் முயற்சிக ளில் ஈடுபட்டு வருகின்றன.

இதுதொடர்பில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுக்கும் , ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பல்வேறு சந்திப்புகள் கடந்த காலத்தில் இடம்பெற்ற போதிலும், எவ்வித இணக்கப்பாடுகளும் எட்டப்படாமலேயே அந்த சந்திப்புகள் முடிவுற்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என பசில் ராஜபக்ஷ, இந்த சந்திப்புகளில் கோரிக்கையாக முன்வைத்தபோதிலும், அதற்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கவில்லை.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கயுள்ளதாலும் இரண்டு கட்சிகளும் ஆளுங்கட்சியாக இருப்பதாலும் கட்டாயம் கூட்டணியொன்றை அமைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் நடைபெற உள்ள இந்த சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரியவருகிறது.

என்றாலும், பொதுஜன பெரமுனவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு குழுவும், நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஒரு குழுவும் உருவாகியுள்ளது. இவர்களை சமரசப்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் முக்கிய அவதானம் செலுத்தப்படும் என அறிய முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருவதால் கொழும்பில் அரசியல் கூட்டணி பேச்சுகளும் பேரம் பேசுதலுதம் சூடுபிடித்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில பங்காளிக் கட்சிகளை தமது பக்கம் இழுக்கும் நகர்வுகளிலும் ரணில் ஈடுபட்டுள்ளார்.

அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிலரையும் ஆளுங்கட்சியில் இணைக்கும் முயற்சிகளையும் ரணில் மேற்கொண்டுவருகிறார். எதிர்வரும் வாரங்களில் பல அதிரடி அரசியல் நிகழ்வுகள் கொழும்பு அரசியலில் இடம்பெறும் என்றே அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# மடுவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

மன்னார், ஜூன் 30

மடு பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள இரண்டாம் கட்டைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 35 வயதுடைய நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயங்களுடன் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த விபத்தில் உயிரிழந்தவர் - மன்னார் பெரிய கமம் பிரதேசத்தில் வசித்து வரும் இளம் குடும்பஸ்த்தர் என அடையாளம் காணப்பட்டார்.

காயமடைந்தவர் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 30

கடந்த ஆறு மாதங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 7.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த மே மாதத்தில் மாத்திரம் ரூபாவின் பெறுமதி 1.7 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு அரசாங்க நிறுவனங்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகம், பொலிஸ், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பில் புள்ளி விவர அறிக்கையைத் தயாரிக்குமாறும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஊடாக அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

தேர்தலொன்றுக்கு அவசியமான நடவடிக்கைகள் தயார்ப்படுத்தப்பட்டு வருவதாக அரச அச்சகம் அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

முந்தைய வருடங்களைப் போலவே இப்போதும் மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றமையினால், முழுமையான செலவு தொடர்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டார். (அ)

# பாலிதவின் மகன் கைது!

கொழும்பு, ஜூன் 30

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கருவலகஸ்வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் செலுத்திய கார் நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கார் வீதியை விட்டு விலகி முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது காயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பொன்சேகாவின் சேவை நாட்டுக்கு அவசிய தேவை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

யுத்தத்தை வெற்றி கொண்டது மாத்திரமன்றி, பல்வேறு அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்தவர் என்ற வகையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதிர்காலத்தில் நாட்டுக்கு பெரும் சேவையாற்ற முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முப்பது வருடகால யுத்தத்தை நிறைவு செய்ய சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் இராணுவத் தளபதியும், பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் "இராணுவ தளபதி தேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி - இந்த யுத்தம் அடுத்த தளபதி வரையில் நீடிக்க இடமளியேன்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கில் நடைபெற்றது.

இதன்போது புத்தகத்தின் முதல் பிரதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

அதனையடுத்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதிக்கு நினைவு பரிசு ஒன்றையும் வழங்கினார்.

இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் சேவைக்கு பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தை வெற்றி கொண்டது மாத்திரமன்றி, பல்வேறு அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்தவர் என்ற வகையில் எதிர்காலத்தில் நாட்டுக்கு பெரும் சேவையாற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-

பீல்ட் மார்ஷல் அந்தஸ்த்தை சரத் பொன்சேகா மட்டுமே வகிக்கிறார். அவர் யுத்த சவால்களை வெற்றி கொண்ட அதேநேரம் அதற்கு வெளியில் அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்திருந்தார்.

யுத்த காலத்தில் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன ஊடாகவே இவரை நான் அறிந்துகொண்டேன். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன என்னோடு சமீபமாக பழகியவர். இந்த அதிகாரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது, அதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்குமாறு சிசில் வைத்தியரத்ன கூறினார். யுத்தம் ஆரம்பித்த காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் அரசாங்கத்திலிருந்த நான் யுத்தத்தில் பங்கெடுத்திருந்த பெரும்பாலான அதிகாரிகளை அறிவேன். அப்போது பல்வேறு சிறந்த அதிகாரிகள் உருவானதோடு அவர்களின் வரிசையில் சரத் பொன்சேகாவுக்கு சிறந்த இடம் காணப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஜயசிக்குறு போராட்டம் தோல்வியை தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் நான் பிரதமராக பதவி வகித்ததோடு, யாழ்ப்பாணத்தை யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது. அப்போது பலர் இறந்து போயிருந்ததோடு, காயங்களுக்கும் உள்ளாகியிருந்ததால் படையினர் எண்ணிக்கை குறைந்திருந்தது.

யாழ்ப்பாணத்துக்கான படைப்பிரிவொன்று அவசியமெனச் சிலர் கூறினர். அப்போது நான் சரத்



பொன்சேகாவிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைப்போம் என இராணுவத் தளபதியிடம் கூறினேன். அதன்படியே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவர் வீழ்ந்த இடத்தில் எழுந்து யுத்த வெற்றியை நோக்கி நகர்ந்தார். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. யுத்தம் என்பது கிரிக்கெட் போட்டியை போன்றதல்ல. உயிரிழப்புக்கள் ஏற்படும். சொத்துக்கள் இழக்கப்படும். அதற்கு மத்தியிலும் யுத்தத்தை வழிநடத்திச் செல்லும் வல்லமை அவரிடம் இருந்தது.

உலகத்தில் மிக மோசமான யுத்தமொன்றுக்கே நாம் முகம்கொடுத்தோம். மற்றைய நாடுகளில் இன்றும் அவ்வாறான யுத்தங்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ்தான் யுத்தம் இலங்கைக்கு முன்னதாக ஆரம்பமானது. அந்த வகையில் சரத் பொன்சேகா தனது பொறுப்பை சரிவர செய்திருக்கிறார்.

அதேபோல் சிவில் வாழ்க்கையிலும் அவர் பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறார். அதன்போது அவர் தனிமைப்பட்ட வேளைகளிலும், சிறையிடப்பட்ட வேளையிலும் வலுவான மனிதராக உருவாகினார். அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடு கலந்துரையாடி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அதற்கு தகுதியானவர் என்ற வகையில் அவரும் ஏற்றுக்கொண்டார்.

அரசாங்கம் என்ற வகையில் சரத் பொன்சேகாவின் தெரிவை கொண்டு நாம் பயனடைந்தோம். அவர் போராட்ட குணம் கொண்டவர். யுத்த களத்திலும் அரசியல் களத்திலும் போராட்டத்தை கைவிடவில்லை. அவரால் நாட்டுக்கு இனியும் சேவையாற்ற முடியும். அவரின் சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

தற்போது நாட்டுக்குள் யுத்தம் முடிந்துவிட்டது சமாதானத்துக்கான பணிகளை செய்வோம் என்று சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் வைத்து ஒரு முறை கூறினார். அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்றிச் செல்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன். எமது இராணுவம் அனுபவங்கள் நிறைந்து. நாட்டைக் கட்டியெழுப்பி சமாதானத்தை ஏற்படுத்த இவர்களால் முடியும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org